குடி அரசு வெளியீடு 25.

சோதிட ஆராய்ச்சி.

சோதிடப் புரட்டு பாட்டுகளும் சேர்ந்தது.



ஈ. வெ. ராமசாமி.

"குடி அரசு" பதிப்பகத்தாரால்
வெளியிடப்பட்டது.

விலை] 1936 [அணா 4

குடி அரசு வெளியீடு 25.

சோதிட ஆராய்ச்சி.

——):0:(——

தோழர் ஈ. வெ. ராமசாமியால் எழுதப்பட்ட கட்டுரை
களும், Dr. R. P. பராஞ்சிபே M. A., D. Sc.
அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையும்,
தோழர் தி. அ. வேங்கிடசாமிப்பாவ
லரால் எழுதப்பட்ட பாட்டு
களும் சேர்த்து

குடி அரசு பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.

1935

முன்னுரை.

ஜோசியம், சோதிடம், ஜாதகம், என்பவைகள் பெரிதும் ஒரே அருத்தத்தை குறிக்கின்றன.

அதாவது சோதிடம் இறந்த காலம், எதிர்காலம் இரண்டையும் அறிவதற்கு ஏற்ற சாதனம் என்று கருதப்படுகிறது.

பொதுவாக ஒரு பகுத்தறிவுவாதி ஜோசியத்தின் தன்மையை ஊடுருவிப் பார்த்தால் அதை ஒரு மத சம்மந்தமான கொள்கை என்றுதான் சொல்லவேண்டும்.

ஏனெனில் மத சம்மந்தமான கொள்கைகள் அனேகம் எப்படி மூடநம்பிக்கைகளை அஸ்திவாரமாகக் கொண்டிருக்கின்றனவோ அதுபோலவே ஜோசியமும் ஒரு மூடநம்பிக்கையாகவே இருக்கிறது.

எப்படியெனில் காலம், நட்சத்திரங்கள், லக்கினங்கள் திதிகள் முதலியவைகளைக்கொண்டே எல்லா நடப்புகளையும், நடந்தவைகளையும், நடக்கப்போகின்றவைகளையும் கண்டு பிடித்துச் சொல்லிவிடலாம் என்பதும் மூடநம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டேதேயாகும்.

மற்றும் ஜோசியம் மதக்கொள்கைகளில் பட்டது என்பதற்கு வேறு பல ஆதாரங்கள் என்னவெனில் நட்சத்திரம், லக்கினம், திதி ஆகியவைகளுடைய கதைகளும் அவற்றின் தத்துவங்களும், அதனால் சொல்லக்கூடிய பலன்களும் பெரிதும் மததத்துவத்தை புராண ஆதாரங்களை ஆதாரமாய்க் கொண்டே இருந்தது வருகின்றன.

ஒரு நக்ஷத்திரத்துக்கும், ஒருதிதிக்கும் ஒருகிரகத்துக்கும் ஒரு மதத்தில் இல்லாத கற்பனை மற்றொரு மதத்தில் இருந்து வருகின்றது. மற்றும் சோதிடத்துக்கு ஆத்மா முன் ஜன்மம், பின் ஜன்மம், பாபம், புண்ணியம், சுபம், அசுபம் ஆகியவைகளும் அவசியமாகின்றன. இவையும் மத தத்துவங்களேயாகும்.

ஜோசியத்தை சில மதங்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை. சில மதங்கள் மத விரோதமாய் நாஸ்திகமாய் கருதுகிறது. மேலும் சில கருமங்கள், நல்லவை கெட்டவை,என்பதுவும் மதத்தைப்பொருத்தது. எந்தக்காரணத்தாலும் ஜோசியம்சையன்சைப் பொருத்தது என்று ஒரு சையன்சுக்காரரும் ஒப்புக்கொள்ளவில்லை. கைரேகை, மற்ற பல சகுனம் ஜோசியக்குறிப்பு ஆகியவைகளையும் சையன்சுகாரர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை.

ஜோசியம் மெய்யென்றோ, அது மனித சமூகத்துக்கு பயன்படக் கூடியதென்றோ இருக்குமானால் காற்று அலைகளில் இருக்கும் சப்தத்தையும் அசைவையும் கண்டுபிடித்த சையன்சுக்காரர்களும், கம்பியில்லா தந்தியில் சப்தம், கம்பி இல்லாத தந்தியில் உருவம், கம்பியில்லாத் தந்தியில் அசைவு ஆகியவைகளைக் கண்டு பிடித்த நிபுணர்களும் கல், புல், பூண்டு, செடி, கொடி, மரம் ஆகியவற்றில் உள்ள ஜீவனைக்கண்டுபிடித்த நிபுணர்களும், ஆகாயத்தில் மேலாக பல கோடி மைல் தூரமும் கீழாக பல லக்ஷ மைல் தூரமும் கண்டு பிடித்தவர்களான ஞானிகளும் பெரும் பெரும் அரசாங்கமும் இப்படிப்பட்ட பெரும் லாபகரமான விஷயத்துக்கு பெருத்ததொரு ஆராய்ச்சி சாலை வைத்து பரிசீலனை செய்து சோதிட சாத்திரத்தை மக்களுக்கு பயிர்ச்சி செய்து மனிதனுடைய வாழ்க்கையில்

உள்ள கஷ்டங்களை அடியோடு ஒழித்திருக்கமாட்டார்களா? என்பது மிகுதியும் யோசிக்கத்தக்க விஷயமாகும்.

ஆதலால் மக்கள் வேறு எத்தனையோ விதங்களில் எவ்வளவோ மூடநம்பிக்கைக்கு ஆளாகி அவதிப்படுவதே ஒரு பெரும் தொல்லையாய் இருக்க, இனி ஜோசியத் தொல்லை என்பதாக ஒரு தொல்லை அதிகமாக இருக்கவேண்டுமா என்கின்ற எண்ணத்தின் மீதே ஜோசியத்தைப்பற்றி நமக்குப்பட்டதையும் சில அறிஞர்கள் அபிப்பிராயத்தையும் சேர்த்து ஒரு சிறுபுத்தகமாக இயற்றினோம்.

இதில் பல குறைகள் தப்பு அபிப்பிராயங்கள் இருந்தாலும் இருக்கலாம், இவ்வளவு பெரிய ஆராய்ச்சிக்கு நாம் தகுதி அற்றவராகவும் இருக்கலாம் என்றாலும் தவறுதல் இல்லாமல் தவறற்றவர்களும், தகுதி உடையவர்களும் எவரும் இம் முக்கியமான காரியத்தில் பிரவேசித்து மக்களுக்கு உண்மையை விளக்க முன் வராததால் இந்த தவறுதலைத் திருத்தவே நமது தகுதி இன்மையை எடுத்துக்காட்டவோ முன் வருவதன் மூலமாவது இதற்கு ஒரு வழி பிறக்காதா என்கின்ற நன்னோக்கத்துடனேயே இதைப் பிரசுரிக்கிறோம்.

இங்ஙனம்
ஈ. வே. ராமசாமி,

——

உண்மை விளக்கம் பிரஸ்,
ஈரோடு.

சோதிடம்.

இந்தியாவில் இந்துக்கள் என்பவர்கள் சாமி ஆடுதல், வாக்குச்சொல்லுதல், பூதம்பேய் பிசாசு ஆகியவைமனிதனை அடித்தல், மனிதனைப் பிடித்தல், மந்திரம் மந்திரித்தல், பில்லிசூனியம் செய்து மக்களுக்கு துன்பம் சாவு முதலியவை உண்டாக்குதல், குட்டிசாத்தான் கருப்பு முதலியவைகளைக் கொண்டு சித்து விளையாடுதல், வசியம் செய்து மக்களை ஸ்வாதீனப்படுத்தல், முன் ஜன்மம் பின் ஜன்மம் உண்டெனல் இவை முதலாகிய விஷயங்களில் நம்பிக்கை கொண்டு தங்கள் வாழ்க்கை நலத்திற்கு என்றும், எதிரிகளின் வாழ்க்கையின்கேட்டிற்கு என்றும் எப்படி தங்கள் பணத்தையும் நேரத்தையும் உபயோகிக்கின்றார்களோ, அதுபோலவே தங்கள் வாழ்க்கைக்கு ஜோசியம் என்னும் ஒரு விஷயத்திலும் அதிக நம்பிக்கை வைத்து பணத்தையும் நேரத்தையும் செலவு செய்து வருகிறார்கள். இதனால் மக்களின் வாழ்க்கைக்கு எவ்வளவோ கெடுதிகளும் பொருள் நஷ்டம், காலம் நஷ்டம், தப்பு அபிப்பிராயம்; முதலியவைகளும் ஏற்பட்டு வருவதை கண் கூடாய் பார்க்கின்றோம்.

சாதாரணமாய் எப்போதுமே ஜோசியன், மந்திரவாதி, கோயில் குருக்கள் ஆகிய மூவரும்மக்களின் பேராசைக்கும், முட்டாள்தனத்திற்கும் சரியான கர்த்தாக்கள் ஆவார்கள். எப்படியெனில் முதலில் ஜோசியன் ஒருவனுடைய ஜாதகத்தைப் பார்த்து பலன் சொல்லுவதன் மூலம் கண்டம் நீங்க சாந்தியும், கிரகதோஷ பரிகாரத்

திற்கு சாமிகளுக்கு அர்ச்சனை அபிஷேகங்களும் செய்யும் படி சொல்லுவான். இதைக்கேட்ட அந்த மனிதன் தனது முட்டாள்தனத்தினால் ஏற்பட்ட பயத்திற்காகவும், ஆசைக்காகவும், மந்திரவாதியைக் கூப்பிட்டு சாந்திகழிக்கச் சொல்லுவான். இந்த மந்திரவாதிகள் அனேகமாய் வைத்தியர்களாக இருப்பார்கள். இவர்கள் சாந்தி கழிக்க கடைச் சாமான் பட்டியல்போடும்போதே ஒருமண்டலம் (48நாள்) அரைமண்டலம் நவக்கிரகங்களுக்கோ அல்லது குறிப்பிட்டசனி செவ்வாய் முதலிய ஏதாவது கிரகத்துக்கோ ஒரு சாமிக்கோ அர்ச்சனை, எள்ளு பருத்திக்கொட்டை முதலியவற்றால், விளக்கு வைத்தல் அபிஷேகம் செய்தல் ஆகியவைகளையும் ஏதாவது புண்ணிய புராணம்படித்தல்முதலியவைகளையும் செய்யும்படி சொல்லிவிடுவான். இவைகளை எல்லாம் செய்வதால் மந்திரவாதிக்கும், அர்ச்சகனுக்கும், புராணப் பிரசங்கிக்கும் வரும் வரும்படியில் ஒரு பாகம் ஜோசியனுக்குச் சேர்வதும் உண்டு.

இந்தப்படியே எங்கும் இப்போதும் நடப்பது வழக்கம். ஆகவே இந்த விஷயத்தில் மந்திரம் அர்ச்சனை ஆகியவைகளைப்பற்றி விசாரிக்கு முன் ஜோசியம் என்பதைப்பற்றியே முதலில் யோசிப்போம.

அதாவது:—ஜோசியம் என்றால் என்ன? அது உண்மையா? அப்படி ஒன்று இருக்க முடியுமா? என்பன முதலாகிய விஷயங்களை ஆராய்ச்சி செய்து பார்ப்போம்.

ஜோசியம் என்பது உலக வழக்கில் அனுபவத்தில் ஒரு மனித ஜீவனுடைய பிறந்த காலத்தை ஆதாரமாய் வைத்து அந்த மனிதனின் வாழ்க்கை, அவனுக்கு ஏற்படும் சம்பவம், அதன் பலன் முதலாகியவைகளை மொத்

தமாயும் வருஷ பலனாயும், மாதபலனாயும், தின பலனாயும், சிமிஷப் பலனாயும் சொல்லுவதும், அவற்றுள் துன்பம் வரத்தக்கது ஏதாவது நேர்ந்தால் அதற்கு ஏதாவது பரிகாரம் செய்து தடுத்துக்கொள்வதும், இஷ்டசித்திக்கு ஏதாவது விரோதமாய் இருந்தால் அதற்கும் ஏதாவது பரிகாரங்கள் செய்வதன் மூலம் விரோதத்தை நீக்கி சித்தியடைய முயற்சிப்பதும் ஆகியகாரியங்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்வதாகும்.

இந்த ஜோசியம் முன் சொன்னது போல் பிறந்த காலத்தைக் கொண்டு சொல்வதோடு மற்றும் வேறு பல வழிகளிலும் அதாவது பேர்நாமம், ஜோசியம் கேட்கப்பட்ட நேரம், கேட்பவர் இருக்கும் நிலை, கேட்ட சங்கதி ஜோசியனுக்கு எட்டும்நேரம், கேட்பவரின் தாய் தகப்பன் சகோதரம் பந்து முதலானவர்களின் பிறந்தகால ஜாதகம் முதலியவைகளைக் கொண்டும் பலன் சொல்வதும் உண்டு. இன்னும் இது போன்ற பலவகை அதாவது ஏதாவது ஒரு எண்—ஒரு புஷ்பம்—ஒரு எழுத்து ஆகியவைகளைக்கேட்டல், ஒரு அங்கத்தைத் தொடுதல் முதலாகியவைகளின் மூலமும் பலன் சொல்லுவதுமுண்டு. ஆகவே மேல்கண்ட எல்லாவற்றின் மூலம் பலன் சொல்ல முடியுமா முடியாதா என்பதைப் பற்றி யோசிப்பதில் முதலாவதாக இப்பொழுது ஜீவன் பிறந்தகாலத்தை ஆதாரமாக வைத்துப் பலன் சொல்லக்கூடுமா? என்பதைப்பற்றி முதலில் ஆராய்வோம்.

பிறந்த காலம்.

பிறந்தகாலம் என்பது வயிற்றுக்குள் இருக்கும்போதே ஜீவன் (உயிர்) ஏற்பட்ட காலமா? அல்லது வயிற்றிலிருந்து 7, 8, 9, 10 மாதங்களில் எப்பொழுதானாலும் பிறக்கும்

காலமா? அப்படி பிறக்கும் காலத்தில் தலை வெளியில் தெரியும் காலமா? அல்லது ஒரு நாள் அரைநாள் அக் குழந்தை கீழே விழாமல் கஷ்டப்படும் காலத்தில் தலை வெளியாகி நிலத்தில் பட்டு கால் நிலத்தில் விழாமல் தாய் சரீரத்தில் பட்டுகொண்டிருக்கும் காலமா? அல்லது மருத்துவச்சி கை விட்டு எடுத்த நேரமா? அல்லது டாக்டர் வயிற்றை அறுத்து எடுத்த நேரமா? அல்லது கால் தலை ஆகிய எல்லாம் மருத்துவச்சி கையில் விழுந்த நேரமா? அல்லது மருத்துவச்சி கையில் இருந்து கீழே விழுந்த நேரமா? என்பனவாகிய கேள்விகள் ஒரு புறமிருக்க ஜீவனுடைய சரீரமெல்லாம் பூமியில் விழுந்த நேரம் என்பதாக வைத்துக்கொண்டே பார்ப்போமானாலும், அதற்குமாத்திரம் என்ன விசேஷம் என்பது ஒரு பக்கமிருந்தாலும் அந்த நேரத்தையாவதுளப் படிச்சரியாகக்கண்டுபிடிக்க முடியும் என்பதை யோசிப்போம்.

குழந்தைகீழே விழுந்ததும் அது உயிருடனிருக்கிறதா? இல்லையா? ஆணா? பெண்ணா? என்பன போன்றவைகளைப் பார்க்கசிறிது நேரமாவது செல்லும். பிறகு அந்தச் சேதியைக் கொண்டு வந்துவெளியில்இருக்கும்ஆண்களிடம்சொல்லசிறிது நேரமாவது செல்லும். அந்த சேதியைக்கேட்டவன் நேரத்தை குறிக்க அங்கேயே அவனுக்கு கடிகாரம் வேண்டும். அந்த கடிகாரம் சரியான மணியா என்பது தெரியவேண்டும். கடிகாரமில்லாவிட்டால் வானத்தைப் பார்த்து நேரம் கண்டு பிடிப்பதாயிருந்தால் அதற்குப் பிடிக்கும் நேரம் முதலியவை அல்லது அக்கம் பக்கம் கடிகார நேரம் அதுவுமில்லாவிட்டால் உத்தேச சுமார் நேரம் ஆகியவைகளின் தாமதங்களும் பிசகுகளும் எப்படி நேராமல் இருக்கமுடியும்?

இவைஒருபுறமிருக்க அந்தநேரத்தால் பலன் சொல்லுவதானால் அந்தநேரத்தில்உலகத்தில்பிறக்கும்ஜீவன்கள்எவ்வளவு

இருக்கக்கூடும்? மற்ற ஜீவன்களையெல்லாம் தள்ளிவிட்டுவெறு ம்மனிதஜீவனை மாத்திரம் எடுத்துக்கொண்டாலும் உலகத்தில் 170 கோடி மக்கள் இருக்கிறார்கள் என்றகணக்குப்படி பார்ப் போமானால் சென்னை முதலிய பட்டணங்களின் சாதாரண அனுபவங்களின் படிக்கு உலகத்தில் நாள் ஒன்றுக்கு சுமார் 250000 (இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம்) குழந்தை கள் பிறப்பதாகக் கணக்கு ஏற்படுகின்றது. (இந்தக் கண க்கானது ஐந்துலட்சம் ஜனத்தொகை உள்ள சென்னை நகரத்திற்கு தினம் ஒன்றுக்கு 70 குழந்தைகள் பிறப்பதாக வைத்துக் கணக்குப் போடப்பட்டிருக்கின்றது) (இதை த்தவிர கணக்குக்கு வராத விதவைகளின் குழந்தைகள், கல் யாணம் ஆகாத பெண்களின் குழந்தைகள், புருஷன் சமீபத் தில் இல்லாத ஸ்ரீகளின் குழந்தைகள் ஆகியவைகளைச் சேர் த்தால் இன்னமும் இந்த எண்ணிக்கை அதிகமாகும், இது ஒருபுறமிருக்க, மேல்படி சாதாரண கணக்குப்படிக்குப் பார்த் தாலே ஒரு நாளைக்கு பிறக்கும் குழந்தைகளைப் பங்கிட்டுப் ப்பார்த்தால் ஒரு நிமிஷத்திற்கு சுமார் 175குழந்தைகள்வீதம் பிறக்கிறதாக கணக்கு ஏற்படுகிறது. இதில் 35 கோடி ஜன த்தொகை கொண்ட நமது இந்தியாவுக்கு மாத்திரம் கணக்கு பார்த்தால் நிமிஷத்திற்கு 35 குழந்தைகள் வீதம் பிறக்கின்ற தாககணக்கு ஏற்படுகிறது. ஆகவே இந்த 35 குழந்தைகளுக் காவது ஜாதக பலன் ஒத்து இருக்கமுடியுமா? இவைகளுக்கு ச்சரியான நேரம் கண்டுபிடிக்க முடியுமா? என்பதை யோசி க்கவேண்டும்-

நிமிஷக்கணக்கே இப்படி நிமிஷத்துக்கு 35-குழந்தைகள் பிறப்பதாயிருக்கும்போது ஒரு சோதிடம் சொல்லுவதற்கு போதுமான காலமாகிய ஒருலக்கினம், நட்சத்திரம் ஆகியவை களின் காலத்திற்குள் எத்தனை குழந்தைகள் பிறக்கக்கூடும்

என்பதைப்பார்த்தால் இது சிறிதும் பொருத்தமற்றதென்ப தாகவே காணலாம்.

சாதாரணமாய் ஒரு ஜாதகம் என்பது வருஷம், மாதம், தேதி, கிழமை, மணி (அல்லது நாழிகை) அந்த சமயத்தின் லக்கினம், நட்சத்திரம் ஆகியவைகளைக் குறித்துள்ளதேயா கும். உதாரணமாக,

"பிரமாதி வருஷம் புரட்டாசி மாதம் 2-ந்தேதி புதன் கிழமை காலை சுமார் 10½-மணிக்கு விருச்சிக லக்கினத்தில் அஸ்த நட்சத்திரத்தில் ஒருவன் பிறந்தான் என்பதாக ஒரு துண்டுச்சீட்டில் எழுதி ஒரு ஜோசியனிடம் கொடுத்துவிட் டால் இதன் பேரில் அந்த ஜோசியன் பலன் சொல்லி விடக் கூடும் என்பதே அனேகமாக ஜோசியத்தின் லட்சணம். ஆகவே இந்த விருச்சிக லக்கினம் என்பது 5¼ நாழிகை உடை யதாகும். இந்த ஐந்தேகால் நாழிகைக்குள் அதாவது 126 நிமி ஷநேரத்திற்குள் உலகத்திலே 22050 இருபத்திஇரண்டாயிரத் தைம்பது குழந்தைகள் பிறந்திருக்க வேண்டும். இது ஒரு புறமிருக்க, மேலும் இந்த லக்கினத்தில் நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன ஆகிய பூதகண்ணாடிப் பூச்சிமுதல் யானை வரையில் உள்ள ஜீவன்களின் குழந்தைகள் பலநூறு கோடிக்கு மேல் பிறந்து இருக்கவேண்டும். இதுவுமொருபுறமிருக்க.

இந்தியாவில் மாத்திரம் அந்த விருச்சிக லக்கினத்தில் முன் சொல்லப்பட்ட கணக்குப்படிக்கு 3150 மூவாயிர த்து நூற்றைம்பது குழந்தைகள் பிறந்திருக்கவேண்டும்.

ஆகவே அன்றைய தினம் இந்த விருச்சிக லக்கினத்தில் பிறந்த காரணத்திற்காக மேற்படி 4410 பேருக்கும்வாழ்க்கை யில் ஒரேவிதமான குணம்,பலன், அனுபவமிருக்க முடியுமா?

அந்தப்படி இருக்கின்றதா? என்பதை முதலில் யோசிக்க வேண்டும்.

தவிரஇந்தபலன் அனுபவங்கள்மனிதனுக்குத்தானாகவே ஏற்படுவதா? அல்லது "கிரகத்தின்" தன்மையால் ஏற்படுவதா? அல்லது முன் ஜென்மத்தில் செய்த கருமத்தின் பலனாய் பலன் ஏற்படுவதா? அல்லது விதியின் பயனாய் பலன்கள் ஏற்படுவதா? என்பவைகளையும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இந் நான்கிலும் மனிதனுக்குப்பலன் அவனது சொந்த இஷ்டத்தால் செய்கையால் தற்சம்பவமாய் ஏற்படுமானால் மேல் காட்டியவைகளில் அது தவிர மற்றவைகள் மூன்றும் அடிபட்டுப்போகும். கிரகங்களின் தன்மையினால் ஏற்படும் என்றால் இதைத்தவிர மற்ற மூன்றும் அடிபட்டுப்போகும். முன் ஜன்ம கர்மத்தின்படி என்றால் இது தவிர மற்றமூன்றும் அடிபட்டுப்போகும். தலைவிதிப்படி என்றால் இது தவிர மற்ற மூன்றும் அடிபட்டுப்போகும். ஆகவே மனிதனுடைய அனுபவ பலனுக்கு இவற்றுள் ஏதாவது ஒன்றுதான் காரணமாய் இருக்க முடியுமே தவிர இன் நான்கும் சேர்ந்து குழப்பிக் கொண்டிருக்க முடியாது. இது ஒருபுறமிருக்க, இந்த வியாசத்திற்கு அவசியமான பிறந்த நேர லக்கினத்தால் ஏற்பட்ட கிரகத்தன்மைப் பலனைப்பற்றியே மேலும் ஆராய்வோம்.

கிரகபலன்.

உதாரணமாக இன்ன இன்ன கிரகம் இன்ன இன்ன வீட்டில் இருப்பதாலும் இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்ன கிரகங்கள் இன்ன இன்ன கிரகங்களைப் பார்ப்பதாலும் இந்த

ஜாதகன் இன்ன இன்ன காரியம் செய்து இத்தனை தடவை சிறைக்குப் போவான் என்பதாக ஒரு சரியான பிறந்த காலத்தைக் கண்டு பிடிக்கப்பட்ட ஜாதகன் ஒருவனுக்கு சரியான கெட்டிக்கார ஜோசியன் ஒருவன் பலன் சொல்லுகின்றான் என்பதாக வைத்துக்கொள்ளுவோம். இவற்றுள் இந்த ஜாதகன் இன்ன வேளையில் இன்னாரைக்கொன்று ஜெயிலுக்குப் போவான் என்று இருந்தால், அந்தக்கொல்லப் பட்டவனுடைய ஜாதகத்திலும் இன்ன வேளையில் இன்னால் கொல்லப்பட்டுச் சாவான் என்று இருந்தாலொழிய ஒரு காலமும் பலன் சரியாயிருக்கவே முடியாது என்பது உறுதியானதாகும். இந்த இரண்டு ஜாதகர்களுடைய பலனும் இருவருக்கும் தெரிந்து விட்டதாகவே வைத்துக் கொண்டாலும் இவர்கள் எந்தக் காரணத்தைக்கொண்டாவது தப்பித்துக்கொள்ள முடியுமா? என்றால் ஒருகாலமும் முடியவே முடியாது என்று தான் சொல்லவேண்டும். ஏனெனில் தப்பித்துக் கொண்டால் சோதிடம் பொய்யாய்விடும். அன்றியும் ஒரு சமயம் தப்பித்துக்கொள்வதாகவே வைத்துக்கொண்டால் அந்தஇருவர்கள் ஜாதகத்திலும் "இந்த சங்கதி தெரிந்து இருவரும் ஜாக்கிரதையாயிருப்பதின் மூலம் இருவருக்கும் அந்தக் காலத்தில் அந்த சம்பவங்களால் கொலையோ சிறைவாசமோ கண்டிப்பாய் ஏற்படாது" என்று தான் அந்த ஜாதகத்தின் முடிவு இருந்தாகவேண்டும். அப்படியிருக்குமானால் இந்த விஷயத்தை அவ்விருவரும் தெரிந்து ஜாக்கிரதையாயிருந்தாலும், தெரியாமல் கவலையற்றே அஜாக்கிரதையாயிருந்தாலும் இருவருக்கும் கொலையும் சிறைவாசமும்கிடைக்கமுடியவே முடியாது என்பதிலும் சந்தேகமில்லை. ஏனெனில் ஜாதகத்தில் ஏற்கனவே இருக்கின்றபடி நடந்து தானே தீரும்.

இதற்கு சாந்தி, தோஷ பரிகாரம் என்பவைகள் செய்வதன் மூலமாவது ஏதாவது பலனை மாற்றிவிட முடியுமா என்பதையும் யோசித்துப் பார்க்கலாம். அதாவது இன்ன கிரகம் இன்ன வீட்டில் இருப்பதால் இன்ன கெடுதியான பலன ஏற்படும் ஆதலால், இன்ன தோஷ பரிகார சாந்தியும், இன்ன கிரக தேவதைக்கு இத்தனை நாள் அர்ச்சனையும் செய்தால் நிவர்த்தியாகும் என்று ஜோசியன் சொல்வானானால் அல்லது ஜாதகத்தில் இருக்குமானால் இந்த சாந்தியின் மூலமாகவோ அர்ச்சனையின் மூலமாகவோ அந்த கிரகங்களை அந்த காலத்தில் அந்த வீட்டை விட்டு மாற்றமுடியுமா? அல்லது அவைகள் மாறுமா என்பதைக் கவனிக்க வேண்டும். அது மாத்திரமல்லாமல் இம்மாதிரி சாந்தியோ பரிகாரமோ செய்வதன் மூலம் தப்பித்துக் கொள்வான் என்றும் அதில் இருந்தாக வேண்டாமா? அப்படிக்கில்லாத பக்ஷம் எந்த வித சாந்தியாலும் தோஷம் பரிகாரமாக முடியுமா? முடிந்தால் ஜோசியம் பொய்யென்றே தீர்மானமாகிவிடும்.

நிற்க, முடிவாக எநதக் காரணத்தைக் கொண்டாவது ஜோசியம் நிஜம் என்றாகி விட்டால் எந்த மனிதன் மீதும் எந்தக் குற்றமாவது சொல்வதற்கு இடமுண்டா?

ஜாதக பலன்படி நடவடிக்கைகள் நடந்தால் அதற்கு ஜாதகன் மீது குற்றம் சொல்லுவது மடமையும் யோக்கியப் பொறுப்பற்ற தன்மையும் ஆகாதா? என்று கேட்கின்றோம். ஒரு மனிதனுக்கு இன்ன காலத்தில் திருடரால் பொருள் நஷ்டம் ஏற்படும் என்று இருந்தால், அதே நேரத்தில் மற்றொரு மனிதனுக்கு திருட்டுத் தொழிலில் பொருள் லாபம் கிடைக்கும் என்று ஜாதக பலன் இருந்துதான் ஆக வேண்டும். அதுமாத்திரமல்லாமல் திருட்டுக்கொடுத்தவ

னுக்கு பணம் கொடுத்து யார் யார் நஷ்டமடைந்தார்களோ அவர்கள் ஜாதகத்திலும் இன்ன காலத்தில் இன்னாருக்கு பணம் கொடுத்து அது திருட்டுப் போய் அதனால் நஷ்ட மடைய வேண்டும் என்று இருந்தேயாக வேண்டும். அது போலவே திருடினவனிடமிருந்து பணம் வாங்கியவர்களுக் கும் இன்ன காலத்தில் இன்னான் இன்னாரிடம் திருடுவ தால் இன்ன இன்னாருக்கு லாபம் வரும் என்று அவர்கள் ஜாதக பலனும் இருந்தாக வேண்டும்.

ஆகவே இந்தப்படி எல்லாம் ஜோசிய உண்மை இருந்து விட்டால் பிறகு கடவுள் செயல்எங்கே? மனிதன் இச்சை யால் ஏற்படும் மோட்ச நரகம் எங்கே? தலைவிதிஎங்கே? முன் ஜன்ம வினைப்பயன்எங்கே? இவைகளுக்கு வேலை ஏது? மனிதன் பின்னடத்தைக்குத்தகுந்தபடி கிரகங்கள் வந்து அமைந்துகொள்ளுமா? அல்லது கிரகங்களின் அமைந்ததற்கு ஏற்ப நடத்தைகள் ஏற்படுமா? என்பதைப்பற்றி எல்லாம் யோசித்தால் இவை அவ்வளவும் சாரம் அற்றதாகவே முடியும்.

இவைகளுக்கெல்லாம் ஆதாரமும் இடமும் சம்பாதித்து மெய்ப்படுத்தக் முயற்சிப்பதாக வைத்துக்கொண்டாலும் கண் டிப்பாக ஒரு மனிதனின் நடவடிக்கைகளுக்கு அந்த மனித னுடைய பொறுப்பையாவது அடியோடு விட்டுத்தானாக வேண்டும்.

———

2-வது அத்தியாயம்.

ஜோசியம் என்பது ஒரு மனிதனுடைய பிறந்த நேரத்தைக்கொண்டு அந்தச் சமயம் கிரகங்கள் இருந்த நிலைமைக்கேற்ப மனிதனுடைய பலா பலன்களைக் குறிப்பதென்றும்,

இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் மனிதனின் வாழ்க்கை, அவனது பிறப்பு, இறப்பு, இன்பம் துன்பம், சுகம், அசௌக்கியம், செல்வம், தரித்திரம், தொழில், மேன்மை, கீழ்மை, புத்திர களத்திர தன்மை எண்ணிக்கை, ஆயுள் முதலியவைகளைக் குறிப்பதாகும் என்றும்,

இதனைக் கூர்ந்து பார்ப்போமானால் மேல்கண்ட பலன்கள் ஜோசியத்தின் மூலம் உணரலாம் என்பது உண்மையாய் இருக்குமாயின் ஒரு மனிதனின் பிறந்த நேரத்தைக் கொண்டு அப்போதிருந்த கிரகங்களின் நிலையை அறிந்து பலன்களை கணிப்பது என்பதில் குறிப்பிட்ட ஜாதகனுடைய பலன் மாத்திரமல்லாமல் அவனது பலாபலனுக்குச் சம்பந்தப்பட்ட மற்ற அனேகருடைய பலன்களும் அதில் அத்துப்படி ஆகிவிட வேண்டும் என்றுதான் சொல்லவேண்டும் என்றும்,

ஏனென்றால் ஒரு ஜாதகனுக்கு செல்வம் வரவேண்டுமானால், வியாதி வரவேண்டுமானால், உத்தியோகம் வரவேண்டுமானால், சாவுவரவேண்டுமானால் அவை வருவதற்குஹேதுவானமாற்றங்களும் இந்த ஜோசியத்தின் மூலம் அறிந்ததாக வேண்டும். இவனால் மற்றவர்களுக்கு ஏற்படும் லாப நஷ்ட

ங்களும், இவனுக்கு மற்றவர்களால் ஏற்படும் லாப நஷ்டங்களும் கணிக்கப்படும்போது இவனது பலா பலன்களைப் போலவே மற்றவர்களது பலாபலன்களும் ஏற்கனவே அவனவன் ஜாதக பலனின் பயனாய் ஏற்பட்டதாகத்தான் இருக்கவேண்டும் என்றும்,

உதாரணமாக ஒரு ஜாதகனுக்கு சொத்து திருட்டுப் போவதாய் வைத்துக்கொள்ளுவோம், அந்தச் சொத்தை திருடுகிறவனுடைய ஜாதகத்திலும் அவனுக்கு இன்னானுடைய சொத்து திருட்டுப்போகும் என்றும், அது இன்னவனுக்கு கிடைக்கவேண்டும் என்றும் ஏற்பட்டிருந்தாலொழிய அதற்குத் தகுதியான மாதிரி கிரக அமைப்பும், அந்தப்படி கிரகம் அமைந்த நேரத்தில் அவரவர் பிறந்திருந்தாலொழிய இரண்டும் சாத்தியமான காரியமாக ஆகிவிடாதுஎன்றும் முன் அத்தியாயத்தில் கூறியுள்ளோம்.

இது போலவே ஒரு ஜாதகன் மற்றொருவனை கொலை செய்வதாய் வைத்துக்கொள்ளுவோம். இதுவும் இந்த ஜாதகன் இன்னானைக் கொலை செய்துஇன்ன பயன் அனுபவிப்பான் என்று பலன் இருப்பது போலவே, இவனால் கொலை உண்ணப்பட்டவன் ஜாதகத்திலும் இன்னாரால் இவன் கொலை உண்ணப்பட்டு அதனால் இந்த ஜாதகனுக்கு இன்ன பலன் ஏற்படும் என்றும் இருந்துதானே ஆகவேண்டும் என்றும்,

இனி அதுபோலவே எந்த ஒரு ஜாதகனுடைய பலனை கவனித்தாலும் அந்தப்பலனுக்கு சம்பந்தப்பட்ட எல்லா மனிதங்களுடையவும் ஜீவராசிகளுடையவும் அந்தந்தப் பொருள்களுடையவும் ஜாதகமும் சம்மந்தப்படாமல் ஒரு காரியமும் நடக்காது என்றும் கூறுகிறோம்.

பொருள்களுக்கும் பலன்.

மனிதன் பிறக்கும்போது உள்ள நேரத்தைக்கொண்டு அந்த மனிதன் வாழ்வின் பலாபலன் சொல்லப்படுவது போலவே வஸ்துக்கள், தாவரங்கள் முதலியவைகளுடைய பிறந்த நேரத்தைக்கொண்டும் அவைகளுக்குபலாபலன்களைச் சொல்லலாம் என்று ஏன் சொல்லக்கூடாது?

ஏனெனில் ஒரு விக்கிரகம் செய்யப்பட்டால் அது செய்யத்தொடங்கிய நேரத்தையோ செய்து முடிந்த நேரத்தையோ கொண்டு அதன் வைபவத்தைக் குறிக்கலாம் என்று ஜோசியர்களும், சிற்பிகளும் கூறுகிறார்கள்.

அது உண்மையானால் இந்த பலன் என்பது விக்கிரங்களுக்கு மாத்திரமல்லாமல் உலகத்தில் செய்யப்படும் எல்லாப் பொருள்களுக்கும் பொருத்தமானது என்று தானே சொல்ல வேண்டும்.

ஒரு கடியாரம், ஒரு லாந்தர், ஒரு பாத்திரம், ஒரு நாற்காலி முதலியவைகளில் ஏதோ ஒன்றை வைத்துக்கொள்ளுவோம். அது செய்யத்தொடங்கிய நேரமோ அல்லது முடிந்த நேரமோ, அல்லது வாங்கிய நேரமோ, குறித்துக்கொண்டால் அந்த நேரத்தில் இருந்த கிரகநிலைக்கேற்ப மற்றும் அதனுடைய சலனத்துக்கு ஏற்ப பலாபலன்கள் குறிப்பிடக்கூடியதாகவே இருக்கவேண்டும்.

ஏனெனின் மனிதனுக்கும், விக்கிரகத்துக்கும் வாழ்க்கை எப்படி இருக்கின்றதோ அப்படித்தான் மற்ற ஜீவன், புல் பூண்டு, சாதாரண வஸ்துக்கள், ஆகியவைகளுக்கும் இருந்து வருகின்றது.

ஒரு குதிரை பட்டத்துக் குதிரையாய் இருந்து பெருத்த சுகபோகமும் பெருமையும் அடைகின்றது. அதோடு கூடப் பிறந்த மற்றொரு குதிரை ஜட்கா வண்டியில் தினமும் கட்டப்பட்டு முதுகுப்பட்டை வாங்கப்படுவதோடு றெய்ன்ஸ் கயிற்றால் விதரில் அடி வாங்கி விதர் வீங்கி கஷ்டப்படுகின்றது.

இது அவற்றின் "பிறந்த நேர கிரகாச்சாரப் பலன்" என்று தானே சொல்லவேண்டும்.

இதுபோலவே ஒரே பாறையில் உடைத்த இரண்டு பாளக் கல்லுகளில் ஒன்று விக்கிரகமாகி பொன், வைர ஆபரணங்கள் அணிந்து தினம் 6 கால பூஜை, சதுர், பாட்டு, ஆடம்பரம், இரண்டுமூன்று பெண்ஜாதிகள், பல தாசிகள், வருஷா வருஷம் கல்யாணம், பெரிய ஆலயம், திருவிழா முதலிய வைபவங்களைப் பெறுகின்றது. அதனோடு பிறந்த மற்றொருகல் முனிசிபாலிட்டி கக்கூசுக்கு பாவப்பட்டு தினம் நூற்றுக்கணக்கான பேர் செருப்புக்காலால் மிதித்து அதன்மீது ஏறி மலபாதை கழிக்கவும், சதா விளக்குமாறு போட்டு அடித்து கழுவவும், போகின்ற வருகின்ற பேர் காறி உமிழவுமான பலனை அடைகின்றது. இதுவும் அந்தக்கல் பிறந்த நேரத்தின் பயனும் அப்போதிருந்த கிரகநிலைக்கேற்ப ஏற்பட்ட பலன் என்று தானே சொல்லவேண்டும்.

அது போலவே ஒரே தொழில்சாலையில் ஒரே நேரத்தில் செய்யப்பட்ட இரண்டு கடியாரங்களை எடுத்துக் கொண்டால் ஒன்று மகாராஜா கையில் கட்டப்பட்டு சிறிதும் ஆட்டம் அசைவு இல்லாமலும் சரியாய் மணிகாட்டிக்கொண்டு மேன்மையாய் இருக்கின்றது.

மற்றொன்றோ ஒரு கூலிக்காரன் கையில் சிக்கி கண்ட படி அடிபட்டு சாமான்கள் முறிந்து கடியாரமே கெட்டு மூன் றாம் நாளே குப்பைத்தொட்டியில் எறியும்படியாக ஆகிவிடு கின்றது. இதுவும் அந்த கடியாரம் பிறந்த நேரத்திலோ அல்லது வாங்கப்பட்ட நேரத்திலோ கிரகங்கள் அமைந்திருந் தமையைக் கொண்டும் அதன் சஞ்சாரங்களைக் கொண்டும் ஏற்பட்ட பலன் என்றுதானே சொல்ல வேண்டும்.

இதுபோலவே யாவரும் வெறுக்கும் மலம் முதல் கொண்டு ஒவ்வொரு வஸ்துக்கும் அதனதன் பிறந்த நேரத் தின் பயனாய் பலாபலன் இருந்து வந்தால்தான் ஜாதகம் என்பதாக ஒன்று இருக்க முடியுமே ஒழிய மனிதனுக்கு மாத்திரம்தான் ஜாதகம் சொல்லமுடியும் என்றால் அதை யார் ஒப்புக்கொள்வார்கள்.

சிலர் குதிரைக்கும், யானைக்கும் ஜாதகம் வைத்திருப் பதும் பார்ப்பதும் நாம் பார்த்திருக்கிறோம்.

மனிதனுக்கு ஜாதக பலன் சொல்ல முடிகின்றபோது குதிரைக்கும், யானைக்கும், நாய்க்கும், கழுதைக்கும் சொல்ல முடியாது என்று சொன்னால் அது நியாயமாகுமா?

அதுபோலவே குதிரைக்கும், யானைக்கும், நாய்க்கும் ஜாதகம் பலன் சொல்லுவதாய் இருந்தால் கோழிக்கும், குரு விக்கும், பாம்புக்கும், தேளுக்கும், ஓணானுக்கும், பல்லிக் கும், ஈய்க்கும், எறும்புக்கும், பூச்சிக்கும், புழுவுக்கும், கிரு மிக்கும் ஜாதக பலன் சொல்ல முடியாது என்று யாராவது சொல்ல முடியுமா?

கோழிக்கும், குருவிக்கும், பூச்சிக்கும், புழுவுக்கும், அதன் பிறந்த நேரத்தைக்கொண்டு பலன் சொல்லலாம்

என்றால் மரத்துக்கும், செடிக்கும், புல்லுக்கும், பூண்டுக்கும் அது முளைத்த நேரத்தைக்கொண்டு ஏன் பலன் சொல்ல முடியாது?

ஆகவே வஸ்து என்று ஒன்று ஏற்பட்டு அது பிறப்ப தற்கோ தோன்றுவதற்கோ ஒரு நேரமும் இருந்து அந்த நேரத்தைக்கொண்டு அப்போதிருந்த கிரக நிலையை அறி யக்கூடிய எல்லாவற்றிற்கும் ஜோசியம் சொல்லலாம் என் பதுதான் ஜோசியத்தின் தன்மையாக இருக்கவேண்டும்.

இந்த முடிவு எப்படியோ ஆகட்டும். முதலாவதாக ஒரு மனிதனுடையவோ, ஜீவனுடையவோ பிறந்த நேரத் தை எப்படி கணிக்கமுடியும். பிரசவ காலத்தில் வயிற்றுவலி ஏற்பட்ட நேரம் முதல் சிசுவானது கொஞ்சம் கொஞ்சமாய் வெளியாகிறது. உருவம் வெளிப்பட்டு தலையோ காலோ தெரிந்து வெகுநேரம் சென்றும் சில சிசுக்கள் மணிக்கணக்கில் கீழே விழாமல் சிக்கிக்கொண்டும் இருக்கின்றன. கீழே விழுந்த நேரத்தையே எடுத்துக்கொள்வதாய் இருந்தாலும் பெரும்பான்மையான சிசுக்கள் விஷயத்தில் எப்படி சரியான நேரத்தைக் கண்டுபிடிக்க முடியும். இதைப்பற்றி முன் அத் தியாயத்தில் விவரித்திருக்கிறோம்.

ஒரு நாளைக்கு 16 முகூர்த்தங்கள் ஒரு முகூர்த்தத் திற்கு 3¾ நாழிகைதான் இருக்கின்றன. ஒவ்வொரு லக்கி னத்துக்கும் 4¼ முதல் 5¼ நாழிகையும் ஒவ்வொரு நட்சத் திரத்திற்கு சுமார் 60 நாழிகையும் உண்டு.

இதற்குள் பிறக்கும் குழந்தைகள் எல்லாவற்றிற்கும் கிர கம் நட்சத்திரம் என்பவை ஒன்றாகவேதான் இருக்க முடியும். உலகில் ஏற்படும் பிறப்பு இறப்புகள் எல்லாம் இந்த லக்கி

னத்துக்குள்ளும் இந்த நட்சத்திரங்களுக்குள்ளும்தான் வந்தாக வேண்டும்.

அந்தப்படியே வந்து அதைக்கொண்டே பலன் சொல்லக்கூடும் என்றே வைத்துக்கொண்டாலும் மனிதனுடைய நித்திய வாழ்க்கை அனுபவத்துக்கும், பிறந்தபோது கிரகங்கள் இருந்து வந்த நிலைக்கும் எப்படி சம்பந்தம் இருந்துவர முடியும்? எப்படி இருக்கக்கூடும் என்பதை எந்த வான சாஸ்திரியாவது நக்ஷத்திர சாஸ்திரியாவது, ஜீவதத்துவ சாஸ்திரியாவது, உடல் தத்துவ சாஸ்திரியாவது, பொது விஞ்ஞான சாஸ்திரியாவது ஒத்துக்கொள்ளுகின்றார்களா?

ஜோசியம் என்பது பிறந்த காலத்தைக்கொண்டு, அப்போதிருந்த கிரக நிலையை அறிந்து சொல்வது என்பதோடு மாத்திரம் இல்லாமல் மற்றும் எதை எதையோ கொண்டு சொல்லக்கூடியதாய் இருந்து வருவதையும் பார்க்கிறோம்.

ஒரு ஜாதகனுக்கு பலன் சொல்ல அவன் ஜோசியம் கேட்கும்படியான நேரத்தை குறித்து அப்போது இருக்கும் கிரக நிலையை அறிந்துகூட சொல்லப்படுகிறது. மற்றும் ஜாதகனின் பேர் நாமத்தைக்கொண்டும், அவன் சொல்லும் எண்ணைக்கொண்டும், அவர் சரீரத்தில் தொடும் அங்கத்தைக்கொண்டும் இன்னும் என்ன என்னமோ ஆதாரங்களைக் கொண்டும் சொல்லப்படுகின்றன.

இவைகளுக்கு எல்லாம் விஞ்ஞான சாஸ்திரம் இடம் கொடுக்கிறதா? விஞ்ஞானத்துக்கு அதாவது பஞ்சேந்திரியங்களால் அறியக்கூடிய தன்மைக்கு விரோதமாய் ஒரு காரியத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் சொல்லப்படுமானால்

பிறகு உலகில் விஷயங்களை எப்படித்தான் நிர்தாரணம் செய்ய முடியும்.

ஒரு வஸ்து நிர்ணயத்துக்கோ ஒரு விஷய நிர்ணயத்துக்கோ ஏதாவது ஒரு முறை அல்லது விதி இல்லாவிட்டால் பிறகு எப்படித்தான் விஷயங்களை நிர்தாரணம் செய்ய முடியும்?

பலன் அமையக் காரணம்.

இந்த விஷயங்கள் ஒரு புறம் இருக்க; இந்த ஜாதக பலன்கள் மனிதனுக்கு இந்தப்படியெல்லாம் அமைவதற்கு ஒரு காரணமும் வேண்டி இருக்கிறது. ஏனெனில் மனித வாழ்க்கையின் தன்மையும், பலன்களும், அனுபவமும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாய் இருப்பதை இயற்கை என்று ஒப்புக்கொள்ளாமல் இருப்பதால் அவற்றிற்கு காரணம் கண்டு பிடிக்கவேண்டி இருக்கிறது. அதற்கு ஜோசியர்களும் மற்றும் கிரக பலன்களில் நம்பிக்கை உள்ளவர்களும் "கிரகங்கள் அந்தப்படியெல்லாம் அமைவதற்கே" காரணம் சொல்லுகிறார்கள். அதாவது ஒவ்வொருவருடைய கிரகாச்சார பலனும் ஜாதகன் பிறப்பதற்கு முன்னமே அமைக்கப்பட்டதற்கு அந்தந்த ஜாதகர்களின் முன் ஜன்ம கர்மத்தின் பலன் என்றும், அல்லது அவனுடைய முன் ஜன்ம நடத்தைக்கு தக்கபடி கடவுளால் விதிக்கப்பட்ட விதி என்றும் சொல்லப்படுகிறது.

ஜோசியத்தை ஒப்புக்கொள்ளுகின்றவர்களோ நம்புகின்றவர்களோ முன் ஜன்மம், முன் ஜன்ம கர்மம், அதை அனுசரித்த கடவுளால் ஏற்படுத்தப்பட்ட விதி முதலியவைகளை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

அப்படி இல்லாவிட்டால் யாதொரு பழிபாவமும் அறியாத ஒரு ஜீவன்தான் பிறக்கும்போது நிஷ்காரணமாய் யதே

ச்சையாயும் இயற்கையாயும் அமைந்திருந்த கிரகங்களின் பய னாய் பலன்களை அடைவதென்றால் அதையும் இயற்கை என்று சொல்லாதவர்கள் அதற்கு ஏதாவது ஒரு காரணத் தைச் சொல்லித்தானே ஆகவேண்டும்.

ஆகவே அந்தக்காரணம் தான் முன் ஜன்ம கர்மத்தின் பலனாகவும் தலைவிதியாகவும் சொல்லப்படுவதாகின்றது. இதனால் தான் ஜோசியம் மத சம்மந்தமானது என்கிறோம்.

முன் பின் ஜன்மத்தை ஒப்புக்கொள்ளாதவன் எப்படி ஜோசியத்தை ஒப்புக்கொள்ள முடியும்?

அன்றியும் ஒப்புக்கொள்ளுவதனால் இதில் மற்றொரு பெரிய பிரச்சனை வந்து புகுந்து கொள்கின்றது.

அதாவது இம்மாதிரி அமையப்பட்ட கிரகங்களின் பல னாகவோ, அல்லது முன் ஜன்மத்தின்கர்மத்தின்பலனாகவோ, தலைவிதியின் பயனாகவோ, கடவுள் சித்தத்தின் பலனாகவோ ஏற்பட்ட அல்லது ஒரு ஜாதகனால் செய்யப்பட்ட காரியங் களுக்கு மறுபடியும் பலன்கள் உண்டா என்பதும், அதற்கு அந்த ஜாதகன் பொருப்பா என்பதும், அது அந்த ஜாதகனை எப்படி கட்டுப்படுத்தும் என்பதுமேயாகும்.

விதிப்படி நடந்தால் பாவம்.

உதாரணமாக ஒரு ஜாதகன் ஒரு மனிதனைக் கொலை செய்வதாக வைத்துக்கொள்ளுவோம். இந்தக் கொலையா னது "இந்த ஜாதகன் இன்ன வருஷம், இன்ன மாதம், இன்ன தேதி இன்ன கிழமை, இன்ன மணிக்கு, இன்னஊர், இன்னானை, இவ்விதமாய், கொலை செய்வான்" என்று கொலை செய்தவனுடைய ஜாதகத்திலும், "இன்ன வருஷம்,

இன்ன மாதம், இன்ன தேதி, இன்ன கிழமை, இத்தனை மணிக்கு, இன்ன மனிதனால் கொலை செய்யப்படுவான் என்று கொலை உண்டவன் ஜாதகத்திலும் கர்மத்தின் பயனாலோ, ஆகவே கடவுள் சித்தத்தாலோ ஏற்பட்டில்லாமல் இக்கொலை எப்படி ஏற்பட்டிருக்கமுடியும் ?

அந்தப்படி விதி ஏற்பட்டிருக்கும்போது கொலை செய்பவன் இந்தக்கொலையை செய்யக்கூடாது என்று எவ்வளவு தான் கருதினாலும் அவனால் கொலை செய்யாமல் இருக்க முடியுமா ? அது போலவே கொலை உண்டவனும் தான் எவ்வளவு தான் ஜாக்கிரதையாய் இருந்தாலும் ஒரு தண்டவாளப்பெட்டியில் வைத்து பூட்டப்பட்டிருந்தாலும் கொலையிலிருந்து தப்பித்து இருக்க முடியுமா ?

"அன்றெழுதினவன் அழித்தெழுதுவானா"
"விதியை யாரால் வெல்லமுடியும்"
"அவனவனின் முன் ஜன்ம கர்மத்தின் பயனை
அவனவன் அனுபவித்தே தீரவேண்டும்"

என்றபடி விதியில் உள்ளதுபோல் நடந்துதானே தீரும். இந்தப்படி விதியினாலோ முன் ஜன்மக்கருமத்தின் பலனாலோ ஜாதக ரீதியாய் செய்யப்பட்ட இந்தக்கொலைக்கும் கொலை உண்ணப்பட்டதற்கும் இந்த ஜாதகன் எப்படி ஜவாப்தாரியாக ஆகமுடியும்? ஜாதகனை எப்படி குற்றம் சொல்லமுடியும்? இதற்காக ஜாதகனுக்கு பாவமோ நரகமோ கர்மத்தின் பயனோ எப்படி ஏற்படும்?

இந்த ஜாதகனுக்கு பாவமோ நரகமோ எப்படி ஏற்படும் என்பது மாத்திரமல்லாமல் மக்கள் விதியின்படியோ, முன் ஜன்ம கர்மத்தின் விளைவின்படியோ, செய்யப்பட்ட காரியங்.

களுக்கு பாவம் என்றோ புண்ணியம் என்றோ எப்படி சொல்லலாம். அதற்காக நரகமோ மோக்ஷமோ அடுத்த ஜன்மத்தில் அடையவேண்டிய பயனோ எப்படி சித்திக்கும்.

ஆகவே மனிதன் அவன் செய்யும் காரியங்கள் எல்லாம் ஜாதகப்பலன்படியும், ஜாதகப்பலன்கள் எல்லாம் விதிப்படியும், விதி எல்லாம் முன்ஜன்ம கர்மத்தின் பலன்படியும் நடப்பதாய் இருக்கையில் பாவ புண்ணியம் என்ற பாகுபாடும், நற்செய்கை துர்செய்கை என்கின்ற பெயரும், எப்படி பொருந்தும்? மோக்ஷத்திற்கும், நரகத்திற்கும், அவசியம் தான் ஏது? அது எதற்காக இருக்கவேண்டும்?

கடவுள்தானாகட்டும் இந்த செய்கைகளுக்கு தீர்ப்புகளோ, விசாரணையோ, சன்மானமோ தண்டனையோ எப்படிச் செய்ய முடியும்? என்பவைகளை யோசித்தால் ஜோசியம் என்பதாக ஒன்று இருக்கமுடியுமா? அது பிறந்த நேரத்தைக் கொண்டு மனித வாழ்க்கையில் ஒவ்வொரு பயனும் சொல்ல முடியுமா?

அப்படி ஒரு சாஸ்திரம் இருக்க பகுத்தறிவின்படி சையன்ஸ்படி இடம் இருக்கிறதா? என்பவைகளை யோசித்து பார்க்கவேண்டும்.

ஜோசியம் என்பதைப்பற்றி இந்துக்கள், மகம்மதியர்கள் கிறிஸ்தவர்கள், முதல் எல்லா ஆஸ்திகக்காரர்களுக்கும் நம்பிக்கை இருந்து வருகின்றது.

சிற்சில மனிதர்கள் ஆஸ்திகர்களாய் இல்லாதவர்களும் ஜோசியத்தை நம்புகிறார்கள். ஏனெனில் அது ஒரு சாஸ்திரமென்றும், அதற்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லையென்றும், ஜோசியம் விஞ்ஞான பரீக்ஷையால் நிர்ணயிக்கக்கூடிய

தென்றும், ஆதலால் அது பிறந்த நேரத்தையும், நக்ஷத்திரங்களையும், கிரகங்களையும், பொருத்தமென்றும், நக்ஷத்திரங்களும், கிரகங்களும், உண்மை ஆனதினாலும் பிரத்தியக்ஷ பிரமாணமானதினாலும், அதை ஒப்புக்கொள்ளவேண்டும் என்றும், அனுபவத்திற்கு ஒத்து இருக்கிறதென்றும், இப்படி பலவாறாகப் பேசி அதை ஒப்புக்கொள்ளுகிறவர்களும், நம்புகிறவர்களும், சமாதானம் சொல்லுகின்றார்கள். இதற்கெல்லாம் காரணம் சிலரது பேராசையும் மூடநம்பிக்கையும் அவர்களது மதக்கொள்கைகளையும், பகுத்தறிவையும் பறக்கச் செய்து விடுகிறது.

இந்த சமாதானங்களைப்பற்றி பின் ஒருசமயம் ஆலோசிப்போம். இப்போது இந்தப்படி ஒருசாஸ்திரமோ பலனோ இருக்க நியாயம் உண்டா என்பதைப்பற்றி மாத்திரமே இவற்றைக்கொண்டு ஆராய்ந்தோம்.

———):0:(———

ஜோசியமும், சகுனமும்.

—✻—

(டாக்டர் பராஞ்சிபே)

மத சித்தாந்தங்களிலுள்ள நம்பிக்கையே மாந்தரின் பகுத்தறிவைச் சிதைத்து, அவர்களை ஜோதிட தீர்க்கதெரிசிகள் என்று சொல்லப்படுகின்றவர்களின் மாய வலைகளில் எளிதில் அகப்படுமாறு செய்கின்றது.

மறைவாக உள்ள இடத்தைக் காணவேண்டுமென்பதில் மனிதனுக்கு ஆவல் அதிகம்; அதனால் இனி வரப்போகும் எதிர்கால சம்பவங்களை முன்னமே உணர்ந்து, அவைகளால் தனக்கு, தற்காலத்திலிருக்கும் கஷ்ட நிஷ்டூரங்கள் ஒழிவதற்குஏதாவது வழியுண்டாவென்பதுபற்றி அளவுகடந்த ஆசையோடும் விசாரிக்கத்தொடங்குகின்றான்.

பூசாரிகளும், மதக்குருக்களும் எதிர்காலத்தைப்பற்றி முன்னமே அறிந்துகொண்டிருப்பதாக எப்பொழுதும்கூறிக்கொண்டிருக்கின்றனர். தேவதைகளுக்குப் பலியிடப்படும் பிராணிகளின் தும்மல், துடித்தல் முதலிய நடவடிக்கைகளைக்கவனித்தல்; பறவைகள் பறந்துபோகும் திசைகளைப்பார்த்தல்; அந்நாட்டினருக்கு ஏற்பட்ட யுத்தம் முதலிய சம்பவங்களை வேதமாக (Silylline books) பாராயணம் பண்ணுதல்; கஸாண்டிரா (Cassandra) வின் கதை; முதலிய இவைகள் கிரேக்கர், உரோமர் என்பவர்கள் எதிர்கால சம்பவங்களை அறிவதற்கு அடையாளங்களாக மேற்கொண்டார்களென்பது நன்குவிளங்குகின்றன. இன்னும் மந்திரவாதிகளென்ன,

மையிட்டுக் குறிபார்க்கின்றவர்களென்ன, ஜோதிடரேகைசாஸ்திரக்காரர்களென்ன, தீர்க்கதரிசிகளெனப்படுவோரென்ன— இவர்களெல்லாம் சட்டவிரோதமான பல செய்கைகளை மேற்கொண்டு ஒன்றுமறியாத பாமர மக்களைத்தங்களிஷ்டம் போல் ஆட்டி வருகின்றனர். இந்தியாவிலே மேற்கூறியோர் தங்களுடைய அட்டகாசங்களைப் பாமர மக்களிடத்தில் மாத்திரம் இன்றி, படித்தவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களிடத்திலும் சுலபமாகச்செலுத்திவருகின்றனர். பூசாரிகள், மனிதர்களின் வாழ்நாளின் நன்மையைக்காட்டுவதற்கென்று ஜாதகங்களைக்கணித்து வருகின்றனர்; அதோடு வாழ்நாளில் நிகழவிருக்கும் தீமைகளைப் போக்கும் பொருட்டுப் "பிராயச்சித்தம்" என்னும் பெயரால் பலவகையான மந்திர தந்திரங்களையும், சடங்குகளையும் கைக்கொண்டு ஜனசமூகத்தை ஏமாற்றி வருகின்றனர்.

அற்ப சம்பவங்களிலிருந்தெல்லாம் நற்சகுனமென்றும், துற்சகுனமென்றும் ஏற்படுத்திக்கொண்டு, தொடங்கிய காரியங்களுக்கெல்லாம் அவைகளைப்பார்க்கின்றனர். தெருவில் நடக்கும்போது ஒரு பூனை வலமாதலையும், இடமாதலையும் கண்டு அதனால் நல்லது கெட்டது உண்டாகும் என்று கருதப்படுகின்றது. ஒருகாரியத்தை உத்தேசித்துப் போகும் போது ஒரு கைம்பெண் எதிரேவரின் கெட்ட சகுனமாம். அதனால் உத்தேசித்துச் செல்லும் காரியம் கைகூடாதாம் ஆனால் ஒரு கட்டுக்கழுத்தி, அதும் நிறைந்த நீர் குடத்துடன் எதிர்ப்படுவாளானால்அதுமிகவும்மேலானநற்சகுனமாம்; அதனால் உத்தேசித்துச்செல்லும் காரியம் சடிதில் முட்டின்றி நிறைவேறிடுமாம்! வாரத்தில் ஒரு சில நாட்கள் தாம் நல்ல நாட்களாம்; ஏனையவை சூலம்கொண்ட கொடிய நாட்களாம்!

இம்மாதிரியான மூடத்தனமுள்ள சகுன நம்பிக்கைகள் எண்ணிக்கையில்லாமல் இருக்கின்றன. இவைகளையெல்லாம் இந்தியர்களுக்கு, அவர்கள் அறிந்திருந்தாலும் அறியாதிருந்தாலும் கூட வருத்தத்தையும், பயத்தையும் உண்டாக்குகின்றன. இம்மாதிரியான மூடக்கொள்கைகளாகிய வித்துக்களை இளைஞர்களின் மனதில் சிறு வயதிலே விதைத்து விடுவதால் அவைகள் அவர்களிடத்தில் நன்றாக வேரூன்றிச்செழித்துக்கிளைத்து வளர்ந்து வருகின்றன; அவர்கள் பெரியவர்களான பிறகு அவைகளை அகற்றுவதென்றால் முடியாத காரியமாகிவிடுகிறது.

மனிதனின் வாழ் நாளில் நிகழப்போகும் சம்பவங்களை முன்னரே தெரிவிக்கும் சாஸ்திரங்களிலெல்லாம், ஏதோ நக்ஷத்திரங்களின் இருப்பைக்கொண்டு கணிக்கப்படுவதாகக்கூறும் ஜோதிட சாஸ்திரமே மிகச்சாதாரணமாகவும், அதி முக்கியமானதாகவும் கருதப்படுகின்றது. அதிகக்கல்வி கற்று தேர்ச்சி பெற்ற மேனாட்டு அறிஞர்களிலும் கூட அநேகர் இந்தச் சோதிடத்தில் அதிக நம்பிக்கையுடையவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு வருஷ ஆரம்பத்திலும் அந்த வருஷத்தில் நிகழப்போகும் முக்கியமான சம்பவங்கள் என்னவென்பதையும், எவரெவர் சாகப்போகின்றனர், பருவ காலங்கள் என்ன நிலைமையிலிருக்கப் போகின்றனவென்பனபோன்ற விஷயங்களையும் பிரபலமாகப்புஸ்தகங்களில் அச்சிட்டு வெளிப்படுகின்றனர். சோடத்தின் மூலமாகப் பொருள் பறிப்போரைத் தண்டிக்க இங்கிலாந்துதேசத்தில் சட்டம் இருந்தபோதிலும் அந்நாட்டில் உள்ள அனேகர் இன்னும் சோதிடத்தைக் கையாடி வருவதைக்காணலாம். அநேக நாவல்கள்—ஏன்—ஸகாட் (Scott) எனும் பேர் பெற்ற நாவலர் எழுதிய "கை—மேனரிங்" (Guymannering) "க்வெண்டின்—டர்

வார்ட்" (Quentin Durward) எனப்படும் நாவல்களில்கூட இந்தச்சோதிட விஷயம் கையாளப்பட்டிருக்கின்றது. ஆகாயத்தில் ஆகர்ஷண சக்தியால் பல்வேறு கதிகளில் செல்லாநின்ற இந்த நக்ஷத்திரக்கூட்டங்களுக்கும், ஓர் மனிதனுடைய வாழ்நாளின் சம்பவங்களுக்கும், எப்படிச்சம்பந்தம் ஏற்பட்டதென்பதும், அவற்றை இவர்கள் எவ்வாறு அறிந்துஇத்தனை நம்பிக்கையோடு கையாளுகின்றனர் என்பதும், அறிவிற்கே எட்டாததாக இருக்கின்றது. ஆனால் இந்த ஜோதிட கணித சாஸ்திரம் எல்லாத்தேசங்களிலும் கையாளப்படுவதோடு, அந்த விஷயத்தைத்தவிர மற்ற விஷயங்களில் மிக்கத் திறமையும், புத்திநுட்பமும் உள்ள பலரால் நம்பப்பட்டு வருகின்றதென்பதும் உண்மையேயாகும்.

எந்த அறிவாளியும் ஒரு விஷயம், ஏறக்குறைய சற்றேனும் தனது பகுத்தறிவிற்கு எட்டக்கூடியதாக இருந்தால் "முற்றிலும் நம்பத்தகாதது" எனக்கூறமாட்டான் என்பது உண்மை. இதனால் தான் வெளிமாத்திரம் மூட சித்தாந்தங்களாகவிருந்த பல கொள்கைள் பின்னால் அறிஞர்களால் நன்கு ஆராய்ந்துணரப்பட்டு அவற்றிலுள்ள உண்மைத்தத்துவங்கள் வெளியாக்கப்பட்டன. உதாரணமாகச் சூரியப்பிரவேசத்துள் காணப்படும் பலவித மங்குல் புள்ளிகளுக்கும் (Sunspots) பருவக்காற்றுகளுக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாகக் கூறப்பட்ட சித்தாந்தத்தைப் பின்னால் பௌதீகவான சாஸ்திரிகள் நன்கு பரிசோதனை செய்து அதன் உண்மைத்தத்துவத்தை விளக்கினார்கள். "சூரியவெளிச்சம் நமது தேகத்தில் நேராகப்படாவிடினும் அதனால் நமது இரத்தத்தில் மாறுதல் ஏற்படுகின்றது" என்ற விஷயமும் சாதாரணமாக நம்பத்தக்கதாக இல்லை. ஆனால் தேக சாஸ்திர விற்பன்னர்கள் சில வியாதிகளுக்கு மூல காரணமாக இருக்கும்

கிருமிகள், இரத்தத்தை இரவில் பரிசோதிக்கும்போதுதான் புலப்படுகின்றதென்பதையும், பகலில் அவைகாணப்படுவதில் லையென்பதையும் தங்களுடைய ஆராய்ச்சியினால் நிரூபித் திருக்கின்றனர். இருந்த போதிலும் இம்மாதிரியான, வெளி க்கு நம்பத்தகாத விஷயங்களையும், விஞ்ஞான தத்துவமுறை ப்படி ஆராய்ந்தறியப்படும் வரை, நம்பாமலிருத்தல் சால ஏற் புடைத்தாம்.

ஜோதிடத்திற்கும் முற்கூறியவாறுவ்தாவது அடிப்படை யான உண்மைத்தத்துவங்களிருப்பின், அவற்றிற்குள்ள சம்ப ந்தங்களை விஞ்ஞான முறையாக எடுத்துக்காட்டினாலன் றோ அது உண்மையென்று கொள்ளப்படும்? முதலாவதாக அவ்வித அடிப்படையான தத்துவங்களிருக்கின்றன வென்ப தற்குச் சரியான—அதாவது இவைகள்தான் என்ற குறிப் பான—இதுவோ அதுவோ வென்ற சந்தேகங்களுக்கு இடம் இல்லாத ஆதாரங்கள் இவைகள்தான், என்று நமக்குத் தெரிய வேண்டும். பார்க்கப்போனால் இந்தச் சோதிடர்கள், இரண்டு மூன்று விதமாகப் பொருளைத் திரித்தும் மறித்தும் கூறும் புரட்டு மொழிகளை முதன்மையாகக் கையாளுவதோடு, அவர்கள் கூறும் சோதிடமானது பல பொருள் படும் மிக்க சாமர்த்தியமான வாக்கியங்களினாலேயே அமைக்கப்பட்டி ருப்பதும் வெளிப்படையாகத் தெரியும். இன்னும் இந்தச் சோதிடர்கள் குறிப்பாக வெளியிடும் ஆதாரமுள்ள விஷயங் களில் உண்மையாக நடப்பவை எத்தனை? பொய்யாகப் போகின்றவை யெத்தனை? என்பவைகளையும் கணக்கிட்டு, எவை அதிகமாக இருக்கின்றன என்பதைக் கண்டு தெரிய வேண்டும். தவிர—அவ்வளவு முக்கியமன்றெனினும்—எந் தெந்த நக்ஷத்திரங்கள் எவ்வெவ்விதமாக மனிதர்களுக்கு

நன்மை தீமைகளைத் தருகின்றனவென்ற சித்தாந்தம் விளக்கமாகத் தெரியவேண்டும். மேலும் அவற்றிற்கு மாறுபாடாகக் கூறப்படும் எதிர்ப்புகளுக்கேற்ற சமாதானங்களும் அளிக்கப்பட வேண்டும். இந்தப் பூலோகத்தில் வாழும் மாந்தரை ஒன்றாக எடுத்துக்கொண்டோமானால், சாதாரணமாக ஒரு விநாடி (Second) யில் இருபது அல்லது முப்பது [30] குழந்தைகள் ஜனனமெடுக்கின்றன. அவைகள் யாவும் சோதிட சாஸ்திரப்பிரகாரம் ஒரே நக்ஷத்திர பாதத்தில்தான் பிறந்ததாகக் கொள்ளவேண்டியிருப்பதால், அவைகள் ஒரே மாதிரி உருவத்தோடு பிறந்து, ஒரே தன்மையில் வாழ்ந்து ஒரே காலத்தில் இறக்கவும் வேண்டுமன்றோ! உலக வழக்கில் அவ்வாறு இருக்கின்றதா? தவிர, அநேக விஷயங்கள் புதிது புதிதாகக் கண்டுபிடித்து வருகின்றனர். ஏன், மரணத்தைத் தருவதான அநேக நவீன முறைகளும் தற்காலத்தில் சாதாரணமாகக் கையாளப்படுகின்றன. இவைகளையெல் முறைதவறாமல் ஆகாயத்தில் விரைந்தேகும் நக்ஷத்திரங்களுடன் சம்மந்தம்படுத்துதல் பொருத்தமுடையதல்ல என்பது வெளிப்படை.

மேற்குறித்தவைகளைத் தவிர, ஏனைய காரணங்களால், தக்க அத்தாட்சிகள் இல்லாத சோதிட சாஸ்திரத்தை இன்னும் மறுக்க முடியாத ஆதாரங்கள் இருந்தாலொழிய, அறிவாளிகள் நம்பமாட்டார்கள் என்பது திண்ணம். இந்தச்சோதிடத்தை இத்தனை காலமாக எவ்வளவோ மக்கள் நம்பிக்கையோடு கையாண்டு வருகின்றார்கள் என்பதாலேயே அதுசோதிட சாஸ்திரத்திலுள்ள உண்மைத்தத்துவத்தை ஒரு சிறிதும் விளக்குவதாகாது; அது மக்களின் அறிவு, இன்னும் பரந்த நோக்கம் பெறாமல் குழந்தைப் பருவத்திலேயே இருக்கின்றதென்பதைத்தான் உணர்த்துவதாகும்.

சோதிடத்திலுள்ள உண்மைத்தத்துவத்தை, உள்ளபடி ஒரு மோசடியான சாஸ்திரமென்றே, கூறவேண்டியிருக்கிறது. அதில் நம்பிக்கை வைப்பது அனேக கஷ்டங்களையும், மனக்கிலேசத்தையுமே உண்டுபண்ணுவதாயிருக்கின்றது. இதனால் மக்கள், பூசாரிகளுக்கும், மந்திரவாதிகளுக்கும், நக்ஷத்திர அதிதேவதைகளைத்திருப்தி செய்வதற்கென மணிமந்திர பூஜா கைங்கரியங்களுக்கும் ஏராளமான பொருளைப் பறி கொடுக்கின்றனர். சோதிடமே உண்மையென ஏற்றுக்கொண்டபோதிலும் இவர்கள் பூமியில் செய்யும்இந்த மந்திர யந்திர தந்திர பூஜைகள், பரந்த ஆகாயத்தில் எத்தனையோ கோடி மைல் தூரத்திற்கப்பாலிருந்துகொண்டு அதிவேகமாகச் சதா சுழன்று கொண்டிருக்கும் நக்ஷத்திரங்களை, எவ்வாறு திருப்தி செய்கின்றதோ அறியோம்!

ஒரு சோதிடன் ஆரூடம்பார்த்து, "காலம் போதாததாகவிருக்கிறது" என்று சொல்லிவிட்டால் போதும், அது எவ்வளவு அத்யாவசியமான காரியமாக இருந்தபோதிலும் உடனே அதனைக் கைநழுவும்படி விட்டுவிடத்தயாராக இருக்கும் எத்தனையோ மனிதர்களை இப்பொழுதும் காணலாம். நல்ல அழகும், சம்பத்துகளும் நிறைந்த ஒரு வாலிபனோ, அல்லது கன்னிகையோ மூல நக்ஷத்திரம் (Mars) போன்ற இன்னும் சில நட்சத்திர நாட்களில் பிறந்திருந்தால் அவர்களுக்குக்கலியாணம் ஆவது மிகவும் கஷ்டமாம். இந்தமாதிரியான இளைஞர்களின் மண விஷயமாகத் தினசரிப்பத்திரிகைகளில் விளம்பரங்கள் மும்முரமாக வந்துவிடும்; ஏனெனில் அந்தக்கெட்ட நக்ஷத்திரத்தில் பிறந்த ஒருவனுக்கும் அதே மாதிரியான நக்ஷத்திர தோஷமுள்ள ஒருத்திக்கும் மணம் நடைபெறாது; வேறுவிதமாக நடைபெற்றுவிடின், புருஷனோ, மனைவியோ, மாமனாரோ, அன்றி மாமியாரோ கட்

டாயம் மாண்டே தீருவார்களாம்! கலியாணமான பின்னர் ஏதோ காரணத்தால் கணவன் கண்ணுறங்கிவிடின், அப்பொழுது இவ்வித இளம் விதவைகள் மிக்க துர் அதிர்ஷ்டசாலிகளாகக் கருதப்பட்டு அவர்கள் கொடுமையாக நடத்தப்படுகின்றார்கள். பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களில் குதிரைப் பந்தயம் முதலியவற்றிற்கு, மேல் பணம் கட்டுபவர்கள், அவ்வாறு செய்வதற்கு முன், ஒரு சோதிடனிடம் ஆரூடம் கேட்டே பணம் கட்டுகின்றனர். சோதிடன் சொன்ன மாதிரியே அநேக மந்திர தந்திரங்களுடன் நடந்தபோதிலும், அவர்களில் அநேகர் பலதடவைகளில், கட்டிய பணத்தை இழக்கின்றனர். எத்தனை தடவைகளில் அவ்வாறு மோசம்போனபோதிலும், அவர்களிடம் இந்த மாயா சோதிடத்தின்பால் வைத்துள்ள மூட நம்பிக்கை குறையாமலிருப்பதை இன்னும் காணலாம். வியாபார நிமித்தமாகத்தங்கள் மூலதனத்தைப்போட்டுச் சரக்குகளைச்சேகரித்து வைப்பவர்களில் அநேகர், சோதிடனை நம்பி நல்ல காலத்திற்காகக்காத்திருந்து மோசம் போகின்றார்கள். சோதிடத்தை விடுத்துத் தங்கள் சுயமதியை நம்பி நடந்திருப்பார்களானால், மிக்க நலமாகவேயிருக்குமென்பதை அவர்கள் அறிகின்றார்கள் இல்லை. ஒரு அறிவாளிக்கு விஞ்ஞான தத்துவங்களெல்லாம் (Scientifictruths) வெளிப்படையானவைகளாகவே யிருக்க வேண்டும்; அவற்றுள் ஏதாவது ஒரு சித்தாந்தம் தப்பிதம் என்பதாக நிரூபிக்கப்பட்டு விட்டால் அதனால் என்ன நன்மை நேரிடுவதனாலும் அது தள்ளிவிடப்படுகின்றது. சோதிடமானது வெளிப்படையான உண்மையானதென்று நிரூபித்துக்காட்டப்பட்டது அல்லவாயினும் அதன் கொள்கைகளின் பிரகாரம் நமது எதிர் காலத்தை முதலிலேயே அறிவதால் நமக்கு இப்போதிருக்கும் நன்மை தீமைகளைவிட ஏதாவது அதிகமான நன்மை ஏற்படப்போகிறதா என்பதை நாம்கேட்டுத்தெரிந்து கொள்ள

ஆசைப்படுகின்றோம். இனி என்ன ஏற்படப்போகின்றதோ என்பது நிச்சயிக்க முடியாததாக இருப்பதனால், எதிர் காலத்தைக் கூடிய மட்டும் தனது மனோவலிமையாலும், சமய சாமர்த்தியத்தாலும் வென்று சமாளிப்பதில் தான் வாழ் நாளில் நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஒருவன் தனது ஜாத கத்தைக் கொண்டு தனது ஆயுட்காலத்தில் ஏற்படக்கூடிய ஒவ்வொரு சம்பவங்களையும் முதலிலேயே உணர்ந்துகொள் ளுவானாயின் அவன் தனது நடத்தைகளில் ஒரு சிறிதும் கவ னம் செலுத்தாமல், தானாக வேறு எந்தக் காரியத்தையும் செய்ய மனம் இல்லாதவனாய், சமுதாய வாழ்விற்கோர் முட் டுக்கட்டையாகவே இருப்பான் என்பது திண்ணம்.

சோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கை கொள்வதானது, உயி ருக்குயிராய் எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் காத்தளிப்ப தாகக் கூறும் ஒரு அழியாத கடவுள் மேல் வைக்கும் நம்பிக் கைக்கு முற்றும் மாறானதேயாம். மதத்திலே மாறாத பக்திகொண்டு தங்கள் இஷ்ட காரியாதிகளுக்காக அந்த சர்வ வல்லமையுள்ள கடவுளையே அடிபணிந்து பிரார்த்தித்து, எண்ணிய எண்ணியாங்கெய்துவதாகக் கூறும் பல மதபக்தர் கள் கூட தங்கள் கொள்கைகளுக்கு மாறாக விளங்கும், "நட் சத்திரங்களின் நியதிப் பிரகாரம் விதித்த விதி மாறாது நடக் கின்றது" எனக்கூறும் அந்தச் ஜோதிடத்திலும் குறையாத நம்பிக்கையோடிருப்பது எதற்காகவோ அறியோம்.

இம் மாதிரியான ஒன்றுக்கொன்று மாறுபட்ட தன்மை யுடையவர்களை நம்பி நடப்பது அவர்கள் தங்களுடை அறி வை நேர் வழியில் செலுத்தாமையே விளங்குகின்றது. மதப் பற்று மிக்குள்ளோருக்கும் பகுத்தறிவிற்கும் வெகு தூரம் போலும்!

நாம் இவ்வளவு அதிகமாகச் ஜோதிடத்தைப்பற்றி வலியுறுத்தவேண்டி யேற்பட்டது எதனாலெனில், இரசாயனம் பூகோளம் முதலிய சாஸ்திரங்களே போல் இதனையும் ஓர் உண்மைச் சாஸ்திரமாகக் கருதி வருவதாலும், இதனை முற்றும் நம்பி மோசம் போகும் மாந்தர்கள் இந்தியாவில் மாத்திரம் அன்றி இன்னும் பிறநாடுகளிலும் ஏராளமாக இருக்கின்றார்கள் எனபதனாலுமேயாகும். மேற்குறித்த எதிர்ப்புகள் சோதிடம் போன்ற இன்னும் பல போலி சாஸ்திரங்களுக்கும் பொருத்தமானவைகளே. உதாரணமாக மிக்க பிரக்யாதி பெற்றுள்ள இரேகை சாஸ்திரமும் போலியேயாகும். அறிவைக் கையாளுவோருக்கு எதிர்காலத்தை அறிவிக்கும் ஓர் குறுக்கு வழி இல்லையென்று கூறலாம்.

நாம் அதைப்பற்றி நம் அனுபவத்திற்கேற்ப ஏதோ உத்தேசித்தல் கூடும்; எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான சமாச்சாரங்கள் நமக்கு எட்டுகின்றனவோ அவைகளுக்கேற்ப நமது உத்தேசமும் உண்மையாக அமைவதைக்காணலாம். மானச தத்துவங்களின் விவரங்கள் நமக்கு அதிகமாக விளக்கமுறாதிருத்தலின் தற்காலத்தில் "மனிதன் எதிர்காலத்தை அறிதல் என்பது குதிரைக் கொம்பே"யாம்; ஏனெனில் எல்லாவித மனித முயற்சிகளிலும், எதிர்பாராத விஷயங்கள் நேர்ந்து அவை மனித முயற்சிகளுக்கு மேற்பட்டுவிடின் அவைகளுக்காகக் கடவுளையும் காலத்தையும் நோகாமல் "ஆனது ஆகட்டும்" என அதன் போக்கிலே எதிர்த்து நின்று தனது திடச்சித்தத்தால் சந்தோஷமடைகின்றான்.

——)(——

கௌமார ஜோதிடத்தின் புரட்டு.

———)o(———

(வேலு)

நம் இந்திய நாட்டின்கண் வழங்கிவரும் சோதிடம் என்பதில் அனேக வகைகளுண்டு. முற்காலத்திலிருந்த சுயநலக்காரர்களான சில ஆரியர்களுடைய புத்திக்கும், யுக்திக்கும் எட்டியவாறு பாமர ஜனங்களை ஏமாற்றி தங்களினத்தாரும், இன்னுமவர்களை யடுத்த சோம்பேறிகளும் வயிறு வளர்ப்பதற்கேதுவான முறையில் பல பொய்யும் புனைந்துரைகளையும் சேர்த்து, சோதிட சாஸ்திரம் என்பதாகச்சில நூல்களை எழுதி வைத்துக்கொண்டு ஏமாற்றிப் பொருள் பறித்துக்காலந்தள்ளி வந்திருக்கிறார்களென்று தெரிய வருகிறது. அப்படி ஏற்படுத்தி வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிற பல புரட்டுகளில் "கௌமாரநாடி ஜோதிடம்" என்பது ஓர் தலை சிறந்த ஜோதிடப்புரட்டாகும். மற்ற புரட்டுகளெல்லாம் இதற்கு உறை போடக்காணாது என்பது எனது துணிபு. ஆனால் இந்த கௌமாரநாடி ஜோதிடத்திலும் சில உட்பிரிவுகளுண்டு. அவைகளாவன:— 'கந்தர்நாடி சாஸ்திரம்' 'காக்கையர்நாடி சாஸ்திரம்' 'சிவசிந்தாமணி' 'புஜண்டர் மகாவாக்கியம்' 'இரேகை சாஸ்திரம்' 'கன்மகாண்டம்' முதலியவைகளாகும்.

இந்தக்கௌமாரநாடி ஜோதிடமும், அதன் உட்பிரிவுகளும் பரமசிவன், பார்வதி, முருகக்கடவுள், மற்றும் பல ரிஷிகள் ஆகிய இவர்கள் மூலமாக வந்தவைகள் என்று கதை கட்டி வைத்திருக்கின்றனர்.

இந்த ஜோதிட சாஸ்திரத்தில் சொல்லப்படுபவைகள் ஒருமனிதன் இன்னும் கொஞ்சகாலத்திற்குள் பெரிய பிரபுவாக ஆகிவிடப் போகிறானென்றாவது, அல்லது இன்னும் இரண்டொரு மாதத்திற்குள்ளோ, வருடத்திற்குள்ளோ, இறந்துவிடப்போகிறானென்றோ

இருக்கின்றன. ஆனால் இவைகள் இரண்டும் ஒரு காலத்தில் ஏற்படுமென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்த ஜோதிடத்தைப்பார்க்கப்போன ஒரு மனிதனைக்கொஞ்ச காலத்திற்குள் இறந்து போய் விடுவாய் என்று சொன்னால் அவர்கள் எவ்வளவு திடசாலியாக இருப்பினும், மனதில் சஞ்சலமேற்பட்டு இதே வியாதியாகவும் மாறி அவர்களின் முடிவுக்குக்காரணமாயிருக்குமென்பது மறுக்கக்கூடியதல்லவே.

மேல்கண்ட ஓலைச்சுவடிகளில் ஒரு ஜாதகனுடைய பெயரும், அல்லது ஒரு ஜாதகியினுடைய பெரும், தாய்தந்தையினுடைய பெயரும் சொல்லப்படுகிற விடங்களில் தெளிவாக இன்னபெயருள்ளவர்களென்று ஒருஇடத்திலேனும் சொல்லப்படாமல் பொதுவாகவும், குறிப்பாகவும், சொல்லப்படுகிறது. சமீபத்தில் ஒரு நண்பர் தன்னுடைய ஜாதகத்தைப்பார்க்கச்சொன்ன பொழுது அவருடைய பெயர் 'குருபரன் நாமமாகும்' என்று சொல்லப்பட்டது. அதற்குசுப்பிரமண்ணியக்கடவுளின் பெயர்களில் ஒன்றையுடையவன் என்று இச்சுவடிகளைக்கையாண்டு வருபவர் பொருள் கூறுகிறார். ஜாதகத்தைப் பார்க்கச்சொன்ன அந்த நண்பருடைய பெயர் 'சாமிநாத பிள்ளை' ஆனதால் அது சுப்பிரமண்யக்கடவுளின் பெயரிலொன்றாம். ஆகையால் அதில் சொல்லப்பட்டது முற்றிலும் உண்மையானதென்று சாதித்து விட்டார். மற்றும் தாய்தந்தையர்கள் பெயர் சொல்லப்பட்டது. அது வருமாறு;—

"அன்னையாள் பிருந்தையாவாள்
அத்தனாந்தரள சாமி"

என்று சொல்லப்படுகின்றது, அதற்கு, தாயார் பெயர் துளசியம்மாள் என்றும், தகப்பன் பெயர் முத்துச்சாமி என்றும் பொருள் சொல்லப்படுகிறது. மேற்கண்ட பாடலில் தாயின் பெயர் பிருந்தை என்று சொல்லுவதற்கு துளசி யென்று அனர்த்தம் பண்ணினால் ஏன் அது "பிருந்தை யம்மாள்" என்ற ஒரு பெண் பிள்ளையினுடைய பெயராக இருக்கக்கூடாது? தகப்பன் பெயர் தாள

சாமி என்றிருப்பதற்கு தாளம் என்றால் முத்து, சாமி என்றால்சாமி அதாவது முத்துசாமி என்று பொருள் கூறியமேதாவி, தாளம் என்றால் முத்து, சாமி என்றால் கடவுள் முத்துக்கடவுள் என்று ஏன் சொல்லக்கூடாதோ தெரியவில்லை. (முத்துக் கடவுள் என்பது சரியான பெயரல்லவென்று வாசகர்கள் நினைக்கக்கூடும். அப்பெயரையுடையவர்கள் அனேகரிருக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக:- "முத்துக்கடவுள் சாம்பான்" என்ற பெயர்கொண்ட ஆதி திராவிடர் ஒருவர் இருக்கிறார்) நிற்க, இந்த ஓலைச் சுவடிகள் சமீப காலத்தில் எழுதப்பட்டவைகளென்பதற்கும் பல காரணங்கள் இருக்கின்றன.

"புயலொடு புலவன் சாலில் பூமகன் மதிகோலாக
வெயில் மகன் போகி நண்டில், வேதியன் தேள்மீதாக
செயுமிக்கோள் நிலையில் தோற்றம் சேயாவார்க் குயிர்சீயத்தே
பயன்தரு மிவனின் ஜென்மம், பாண்டியன் நாட்டுக்குள்ளே."

என்பதாகும். இப் பாடலில் சொல்லிய விதமாய (இந்த பாடலில் சொல்லிய கிரகங்களின் நிலையை விளக்கிச் சொல்லுதல் அனாவசிய மென்பதோடு, விரிவஞ்சி விடுத்தனம்) கிரகங்கள் அமையப்பெற்ற ஒரு மனிதனுடைய ஜன்ன பூமியானது "பாண்டியன் நாட்டுக் குள்ளே" இருக்குமென்பது இதன் கருத்தாகும். பாண்டியன், சோழன், சேரன், முதலிய மன்னர்கள் தென்னிந்தியாவில் சமீபகாலத்திலிருந்து அரசுபுரிந்தவர்கள் என்பது வெள்ளிடைமலையாம். ஏறக்குறைய அதாவது கி. மு. 200-ம் வருஷ வாக்கில் பாண்டியர்கள் மதுரையை ராஜதானியாகவும், கொற்கையை துறைமுகப் பட்டணமாகவும் கொண்டு அரசு புரிந்திருக்கிறார்களென்பது சில சரித்திர ஆராய்ச்சி மூலமாகத் தெரிய வருகிறது. ஆனால் இந்த 1930ம் வருஷத்தில் ஜாதகம் பார்க்கிற ஒரு ஜாதகருடைய ஜனன பூமியானது பாண்டியன் நாட்டுக்குள்ளே என்றுசொன்னால் அது எவ்வகையில் பொருத்தமுள்ளதென்று சொல்லமுடியும்? இந்த பனையோலை சாஸ்திரங்களை திருவாய் மலர்ந்த பரமசிவனுக்கோ, பார்வதிக்கோ, சேர சோழ பாண்டியர்களுக்குப் பிறகு அவர்களு

டைய நாடானது அநேகருடைய வசதிலிருந்து அதற்குப் பிறகு ஐரோப்பியர்கள் கைப்பற்றி ஆட்சி புரிவார்களென்று தெரிந்திருந்தால் இவ்விருபதாம் நூற்றாண்டில் ஜாதகம் பார்க்கிற ஒரு மனிதனுடைய ஜனன பூமி பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் இருக்குமென்றோ பிரஞ்சு இந்தியாவுக்குள் இருக்குமென்றோ, இன்னும் மற்ற சுதேச அரசர்களுடைய ஆளுகைக்குட்பட்டிருக்கும் தேசங்களில் இருக்கு, மென்றோ ஏன் சொல்லியிருக்கக்கூடாது? பாண்டியன் முதலியவர்களுடைய பெயர் பிரஸ்தாபிக்கப் படுவதால் பாண்டியன் காலத்திலோ, அல்லது அவர்கள் காலத்திற்குப்பிறகோ ஜீவனார்த்தமாக இந்த ஓலைச்சுவடிகள் எழுதப்பட்டிருக்க வேண்டுமே யொழிய இந்த கௌமார ஜோதிடம் ஒருக்காலும் பரமேஸ்வரனால் சொல்லப்பட்டது மல்ல. பார்வதியால் கேட்கப்பட்டது மல்ல. என்பது உறுதிப்படுகின்றது. அச்சுவடிகளில் தற்காலத்தில் வழங்கப்படும் நவ நாகரீகமான பெயர்களாகிய கோகிலாம்பாள் சுசீலா, மோகனவல்லி, அம்புஜா, சரோஜினி, இராவணதாஸ் தமிழன், பொதுநலப்பிரியன், பகுத்தறிவுக்காரன், புஷ்பவனம், ரோஜாப்பூ முதலிய பெயர்களும் பின்னும் மோசஸ், ஜான், ஹோமர் உட் (Wood) அபுபக்கர், மகமட் கௌஸ் முதலிய பெயர்களும் இந்த ஓலைச்சுவடி எழுதப்பட்ட காலத்தில் வழங்கி யிருக்க மாட்டாதாகையால், இந்த சுவடிகளை எழுதி வைத்துள்ள சவுண்டிகளுக்கோ, அல்லது அதை யுபதேசித்ததாகச் சொல்லும் லிங்கதேவராகிய பழய பரமசிவனுக்கோ, மேலே விபரிக்கப்பட்டுள்ள பெயர்கள் தெரிந்திருக்க பிரமேயமேயில்லையாதலாலும், அப்பெயர்கள் இந்தச்சுவடிகளில் ஒரு இடத்திலேனும் காணப்படாதது கவனிக்கத்தக்கது. இதில் கந்தர் நாடியென்பதை சிவபெருமான் உபதேசித்திருக்க அதற்கு கந்தர்நாடி என்று பெயரேற்படுவதற்கும் காரணம் தெரியவில்லை.

இவ்வளவு புரட்டுள்ள இச்சுவடிகளை உண்மையான சாஸ்திரமென்று மதிமயங்கித் திரியும் நமதருமைச்சகோதர சகோதரிகளு

க்கு நல்லுணர்ச்சியேற்பட்டு சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளும் திறமை எப்பொழுது ஏற்படுமோ- நம்முடைய ஆயுட்கால பலனையும் முற்பிறப்புகளின் விர்த்தாந்தங்களையும் பரமசிவன் என்று சொல்லப்படும் ஓர் கடவுள், தன் பத்தினியாகிய பார்வதிக்குச் சொல்லவேண்டிய அவசியந்தானென்ன? இந்த விர்த்தாந்தங்களை சொல்லும்படி பார்வதி கேட்டாளா? அப்படியானால் அந்த பார்வதிக்குத் தெரியாதா? ஒரு வேளை பரமசிவனே வேலையற்றுப்போய் இந்த சவிஸ்தாரங்களை சொல்லிக்கொண்டிருந்தாரென்று சொல்லுவதற்கும் இடமில்லை. ஏனெனில் இவரோ பிச்சை எடுத்துக்கொண்டு வந்து தன் பெண்ஜாதி பிள்ளைகளை போஷிக்கவே நேரம் சரியாகயிருக்குமே,ஒரு வேளை இவருக்குக் கொஞ்சம் அவகாசமிருந்ததென்று வைத்துக்கொண்டாலும், தான் குந்தியிருக்க ஒரு குடிசையாவது கட்டிக்கொள்ளக்கூடாதா? பரிதாபம். இவர் வசிப்பதோ பனிமலைமேல். மழை வெயிலெல்லாம் இவர் தலைமேல். இவ்வளவு செல்வத்தோடு வாழப்பட்டவருடைய ஜாதகத்தை யார் எழுதிவைத்திருக்கிறார்களோ தெரியவில்லை. இவ்வளவு யோக்கியதையில் உள்ளஇந்த வெட்கங்கெட்டகடவுள்மற்றவர்களுடைய ஜாதகத்தை ஞானதிர்ஷ்டியினாலறிவதும்அதைபார்வதிக்குசொல்லுவதென்பதும் எவ்வளவு வெட்கக்கேடு பாருங்கள். ஐயா, போகட்டும் ஏதோ அவர்தான் சொன்னாரே அதோடு நின்றதா? இல்லை! பார்வதியோ, கந்தனோ ஒன்றாவது விடாமல் இதை பனங்கொட்டைத் தலையர்களான ரிஷிகளுக்குச் சொல்லவேண்டிய காரணமென்ன? இதை யார் பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்து எழுதியது? என்ன பாருங்கள்! எல்லாம் மோசமாகவேயிருக்கிறது. சாதாரணமாக ஏதாவது ஒரு விஷயத்தை சிலர் சொல்ல அதை பலர் நம்பும்படியாகச் செய்ய வேண்டியதற்காக பரமசிவன் பார்வதிக்குச் சொன்னது அதை பார்வதி நந்திக்குச் சொல்ல, நந்தியானவர் அப்படியே அதை சாணத்தோடு கலந்து வெளியே தள்ள, அந்த சாணத்தை எடுத்துக்கொண்டு வந்த எங்கள் பாட்டியினுடைய அம்மாயி அதைக் கண்டுபிடித்து பொறுக்கியெடுத்து எங்கள் தாத்தாவி

னிடம் கொடுக்க எங்கள் தாத்தாவானவர் அதை எனக்குச் சொன்னார் என்று சொன்னால் இதை மறுப்பதற்கு ஒருவரும் முன் வருவதில்லை. ஏன்? கடவுள் சொன்னது என்று முதலிலேயே அஸ்திவாரம் போடப்பட்டிருப்பதுதான் அதற்குக் காரணமாகும்' ஆனால் அம்மாதிரியாக இனிமேல் ஏமாற்ற முடியாது. எல்லோரும் கண்விழித்துக் கொண்டார்கள். தூங்கின காலமெல்லாம் மலையேறிவிட்டது. வெள்ளெழுத்துக்காரர்கள் கூட கண்ணாடி போட்டுக்கொண்டு விட்டார்கள் 'கௌமார ஜோதிடம்' என்பது கழுதைப் புரளி என்று தெரிந்து விட்டது. இனிமேல் எந்தவகையிலும் ஏமாற்ற முடியாது இந்த கௌமார ஜோதிடமே காற்றில் பறக்கையில் மற்ற ஜோதிடங்கள் மாளாமல் என் செய்யும்?

சோதிடப் புரட்டுக் கும்மி

——):0:(——

தன்னன நானன நன்னன நானன

நன்னன நானன நன்னானே [மெட்டு]

முப்பது நாழிகை கொண்டதொரு பகல்
முப்பது நாழிகை யோரிரவாம்
இப்படி யேழுநாள் கொண்டதோர் வாரம்
இது நாலுகொண்ட தொருமாதம் (1)

மாதம் பனிரெண்டு கொண்டதொ ராண்டாய்
வகுத்துக் கால வரையதனை
தீதின்றி யேமக்கள் வாழ்க்கை முறைக்கேற்ற
திருத்தம் செய்தனர் முன்னோர்கள் (2)

இந்த வகைக்கால வணிப் படிகளில்
இம்மியும் தாமதமில்லாதே
தந்தம் தொழில்களைச் செய்துமேற் செல்கின்றார்
தாரணி மாந்தர்க ளெல்லோரும் (3)

நல்லநாள் தீயநா ளென்றுபா ராமலே
நாளெலாம் தொழில்கள் செய்வதனால்
செல்வம் பெருகியே யிங்கிலாந்து முதல்
தேசங்க ளோங்கிச் செழிக்குதுபார் (4)

சிலநூற் றாண்டுக்கு முன்பு பச்சையூன்மீன்
தின்றிலை தோலுடுத் தேகுகையில்
நலமில் குடிசையில் வாழ்ந்த மாந்தரிந்த
நாளி லிருக்கின்றனமேன்மை யைப்பார் [5]

அறுபத டுக்குகள் ஐம்பத டுக்குகள்
அமைந்த மாடங்கள் கட்டியதில்
நிறுவு மின்சாரப் படிமூலம் கீழ்மாடம்
நிகர்ப்பமேற் சஞ்சரிக் கின்றார்கள் (6)

நீராவி யந்திரக் கப்பல்வண் டித்தொடர்
நேரா யமைத்துக் கடல்களையும்
ஓரைந்து கண்டங்களையுமே சுற்றி
யுலாவிப் பிறநாட்டி லுள்ளதெல்லாம் [7)

தங்கள் நாட்டிற்குக் கொண்டுசென்றே மக்கள்
தமக்கு வேண்டும் தொழில்கள்தந்து
மங்கள மாகவெல் லோர்களும் வாழ
வழிகள் பலவகுக் கின்றனரே (8)

மோட்டார்க ளெங்கணு மோடுதுபார் விண்
முழுதும் விமானம் பறக்குதுபார்
பாட்டுகள் யந்திரம் பாடுது பாரெல்லாப்
பாக்கியம் மேல்நாட்டுக் கோடுதுபார் (9

காலத்தை யந்திரம் காட்டுது பார்தந்திக்
கம்பியிற் செய்திகள் பம்புதுபார்
மேலுமின் சாரத்தால் வண்டிகள் தீபங்கள்
விசிறிக் கூட்டமியங் குதுபார் [10]

மக்கள் செயுந்தொழில் யாவுமி யந்திர
மாட்சியா லெங்கும் நடக்குதுபார்
திக்கெலா மொற்றை நொடிக்குளே செய்திகள்
சென்று விடைகொண்டு மீளுதுபார் (11]

இன்னும் எத்தனை யோதெய்வ சக்திகள்
இந்தியா விற்குள் வந்ததுபார்
இன்னவை யாவையும் சோதிடம் பார்த்தோ
இபற்றினா ரந்தமே னாட்டார்கள் (12)

இந்திய நாட்டின ரிவ்வகை யற்புதம்
ஏதேனும் கண்டுபி டித்ததுண்டோ
முந்திநம் ரிஷிகள் கண்டு பிடித்த
முறையிவை யென்று முணுமுணுப்பார் (13)

மற்றைய நாட்டின ரிப்படி முன்னேறி
வரநம் நாட்டினர் சோம்பர்களாய்
வற்றிவ தங்கிவாய் வேதாந் தம்பேசி
வறண்டு கிடக்கின்ற காரணமேன் (14)

சொல்லுமிந் நாட்டிற் புராணப் புரட்டுகள்
சோதிட மென்னும் புரட்டுகளும்
புல்லிய சாதிப் புரட்டும் சமயப்
புரட்டுகள் கோயிற் புரட்டுகளும் (15)

கோயிற்குச் சூலம்போட் டுவிட்ட காளைபோல்
குருக்கள் செய்யும் புரட்டுகளும்
தீய புரோகிதர் செல்வர் புரட்டொடு
தேசீய காங்கிரஸ் புரட்டுகளும் (16)

இவ்வித மானபுரட் டெலாம் சேர்ந்துமே
இந்திய மக்களைக் கீழாக்கி
திவ்விய மான அறிவைக் குறைத்துச்
சிறுமை புரிந்தது தேமொழியே (17)

இத்தனை யானபு ரட்டினில் சோதிட
மென்னும் புரட்டுப் பெரும்புரட்டாம்
அத்தை முழுவதும் சொல்லவென்றா லென்னா
லாகாது சிறிது கூறுவன்கேள் (18)

ஆண்டுமா தம்வாரம் நாள்பகல் கங்குல்
அதில்நாழி யென்னும்கா லவகைகள்
வேண்டிய தேயதன் மேலுள்ள சோதிட
விண்ஜம்பத் தாலுப யோகமுண்டோ (19)

நக்ஷத்திரந் திதி யோகங் கரணங்கள்
ராசிக ளோடுந வக்ரகங்கள்
விச்சித்ர வானநூல் வல்லார் கணித்து
விடுத்தா ரண்டத்தின் கதியறிய (20)

வானநூ லென்னி லண்டத்தின் கணிதநூல்
வல்லவ ரின்றுமா ராய்கின்றார்
வான நூல்போலப் பாழ்ஞ்சோதிட நூலினால்
மக்களுக் குப்பய னேதுமுண்டோ (21)

ஏடுத னிற்சுரைக் காய்கறிக் காகுமோ
ஏழைகளுக் கிதனாற் பயனென்?
கோடிபொன் என்றுதான் தன்னிற்ப டித்திடில்
ஓடெடுத் தோனுக் குதவிடுமோ? (22)

சந்திரன் தேய்தல் வளர்தல் கிரகண
சம்பவங்கள் நேரிற் காணுகின்றோம்
இந்த இருவகை யேயிக்க ணிதத்தால்
இந்நாட் டார்கண்ட வுண்மைகளாம் (23)

மனிதன் வாழ்க்கை நிகழ்ச்சியைச் சோதிட
வாணர்கண் டுசொல்ல வல்லவரோ
மனிதன் ஆயுள் முடிவினைத் திட்டமாய்
வழுத்தச் சோதிடர் வல்லவரோ (24)

இன்ன காலத்தில் இன்னவி டத்தினில்
இவ்வள வுமழை பெய்யுமென்று
சொன்ன சொல்கின்ற சோதிட ருண்டானல்
சொல்லுவாய் பார்ப்போம் சுடர்த்தொடியே (25)

இன்ன மனிதனுக் கின்ன நாளினில்
இன்னவ ளைமணஞ் செய்வாரென்று
முன்னமே சொல்லிட வல்லவ ருண்டானால்
மொழிவாய் பார்ப்போம் கிளிமொழியே (26)

இன்னவ னின்னின்ன தானத்தி வித்தனை
நாளிருப் பானென்று முன்னறிந்து
சொன்ன சோதிட ருண்டானால் சொல்லுவாய்
தோத்திரம் செய்குவோம் தோகையமே (27)

இன்ன தொழில்செய்தா வின்ன பலன்வரு
மென்றுமுன் சொல்பவ ருண்டானால்
அன்ன வர்தங்க ளடியிணை பூசித்தே
அடிமை புரிகுவோம் ஆரமுதே (28)

கோயில்கள் சாமிகள் சாதியின் பேதங்கள்
கூறும ரசியல் வாதங்களும்
மாயப்பு ராணங்கள் வேதங்கள் சாஸ்திர
வர்க்கங்கள் ஜாலச் சடங்குகளின் (29)

பேர்களைச் சொல்லியே மக்களை யேமாற்றிப்
பிழைக்கும் பார்ப்பனர் சோதிடத்தின்
பேரையுஞ் சொல்லிப் பிடுங்கித் தின்னவென்று
பேதகஞ் செய்திட்டார் பெண்மயிலே (30)

யார்க்கும் பிறந்த வருட மாதந்தேதி
யெழுதி வைப்ப தவசியமே
பார்ப்பான் சோதிடக் குப்பையைக் கிளறிப்
பார்ப்பதா லென்ன பலன்வருமே (31)

பிள்ளை பிறந்தக்கால் பஞ்சாங்கக் காரனைப்
பேணிய ழைத்துமே சாதகங்கள்
சொல்லச் செய்தேயவன் கேட்ட பொருள்தந்து
தொழுதல் முட்டாள சனமல்லவோ (32)

சாதகம் தன்னி லெழுதி வைத்தபடி
தப்பித மில்லாம லப்பலன்கள்
ஓதுமு லகினிற் பெற்றவர் யாரேனும்
உண்டோ சோதிட பண்டிதரே (33)

பிள்ளையைத் தொட்டிலி லேற்றிட அன்னம்
பிசைந்து கொடுக்கக் குடுமிவைக்க
பள்ளியில் வைக்கப் பார்ப்பானிடம் நல்லநாள்
பார்ப்பதால் என்பயன் பைந்தொடியே (34)

பிள்ளை பிறந்தக்கால் வயதுக் கேற்ற
பிரகார மப்போதைக் கப்போது
வள்ளன்மை யாகவே செய்வன செய்து
வளர்ப்பது பெற்றோர்க டமையன்றோ? (35)

பார்ப்பா னுக்கும்நாம் பெற்ற குழந்தைக்கும்
பாத்திய மென்ன பயித்தியமே
பார்ப்பான் சொல்லும் பலன்களெல்லா மவன்
பட்டப் பகற்கொள்ளை யிட்டிடவே (36)

கோள்களும் நாள்களும் பார்க்காம லேவளர்
குழந்தை வர்க்கங்கள் மேல்நாட்டில்
நீளு மறுப தடுக்குமா டங்களில்
நின்றுகு லாவுது நேரிழையே (37)

கோள்களும் நாள்களும் பார்த்து வளர்க்கும்நம்
குழந்தை வர்க்கங்க ளிந்நாட்டில்
கூழுக்கும் வாழக் குடிசைக்கும் போக்கற்றுக்
கூகூவென்றே சீவன் போகுதுபார் [38]

நல்லநாள் பாராமல் கல்வி கற்கும்பிற
நாட்டுக் குழந்தைகள் கல்விகற்று
வல்லமை யாகநம் நாட்டில்வந்து நம்மை
வல்லர சாட்சி புரிகுதுபார் [39]

நல்லநாள் பள்ளிவைக் கின்றநம் பிள்ளைகள்
நல்லறி வின்றியே யோர்சிவப்புக்
குல்லாயைக் கண்டக்கா லேபிடர் மீதில்
குதிங்கா லடித்திட வோடுதுபார் [40]

நல்லநாள் பாராமல் தொட்டிலேற் றும்பிற
நாட்டுக் குழந்தைகள் மோட்டார்களில்
வல்ல ஆகாய விமானங்க ளிலுமே
வாகாகச் சஞ்சரிக்கின்றதுபார் [41]

நல்லநாள் பார்த்துப்பார்ப் பானுக்குத் தெக்ஷிணை
நல்கித்தொட் டிலேற்றும் நம்பிள்ளைகள்
செல்லு மோட்டார்ரெயில் கண்டுவெ ருண்டுமே
திக்குமுக்காடித் திகைக் குதுபார் [42]

சடங்குச் சனியனுக் காளாகா மக்களித்
தாரணி யோர்நாளில் சுற்றிவரும்
திடங்கொண்ட யந்திர தந்திர சாதனம்
செய்து விளங்கிடும் சீர்மையைப்பார் [43]

சடங்குச் சனியனுக் காளான பிள்ளைகள்
தம்மூரி லேநடக் கின்றசெய்தி
குடும்பத் தின்செய்திக ளுமறி யாமலே
கூர்கெட்டுப் போய்த்திரி கின்றதுபார் [44]

பொருத்தம் பாராமற் கல்யாணம் செய்திட்ட
பூவையும் காளையும் ஒன்றாகி
துரைத்தன மாகக்கு டும்பவாழ்க் கைசெய்து
துலங்கி யோங்கிவி ளங்குதல்பார் [45]

அருத்தங்கெட்ட பஞ்சாங் கக்காரன் சொற்படி
யாய்மணம் செய்திட்ட தம்பதிகள்
பொருத்தமில் லாமலி ரெண்டுபட்டுத் தங்கள்
போக்கியங் கெட்டுத் தவிப்பதுபார் [46]

நல்லநாள் பாராமல் கூடிப்பெ றும்பிற
நாட்டுக் குழந்தைக ளெல்லோரும்
எல்லையின் றித் தொழில் செய்து செல்வந்தனில்
இந்திரன் ஆகஇ லங்குதல்பார் [47]

நல்லநாள் சாந்திமு கூர்த்தத்தில் கூடியிந்
நாட்டார் பெறும்பிள்ளைக் கூட்டங்கள்
பல்லினைக் காட்டியே கைவிரித்துச் செல்வர்
பாற்சென்று மரம்போல் நிற்பது பார் [48]

தினத்தைப் பாராம லேமணம் செய்திட்ட
தேவிமார் பெற்றிட்ட மக்களெல்லாம்
இனத்துடன் பள்ளர் பறைய ரெளியரைக்
கருணை கொண்டா தரிப்பதுபார் [49]

தினத்தைப் பார்த்து மணஞ்செய்த தேவிக்குச்
செனித்த பிள்ளைக ளெல்லோரும்
தனித்த ஏழையர் கிட்டவந்தால் நாய்போல்
சள்ளுச்சிள் ளென்று விழுவது பார் [50]

நல்லநாள் பாராத நாட்டில் செவிடுமை
கண்ணும் குருடர் முடவரெல்லாம்
கல்விகள் கற்றுத் தொழில்வளம் பெற்றுக்கம்
பீரமதா கவாழ் கின்றதுபார் (51)

நல்லநாள் பார்த்திந்த நாட்டில்பி றந்தங்கம்
காலெட்டும் குறைவில் லாதமக்கள்
கல்விதொ ழிலறி வின்றி நடைப்பிண
மாகிக் கஞ்சிக்கு கதறுதல்பார் (52)

நாளது பாராம லெத்தொழி லும்செய்யும்
நன்முயற் சியுள்ள மேல்நாட்டார்
ஆழக் கடலில் மிதப்பமா டங்கள்
அமைத்ததி லானந்தமாய் வாழ்கின்றார் (53)

ஆகாத ஆண்டுகள் ஆகாத மாதங்கள்
ஆகாதப க்ஷங்கள் வாரங்கள்
ஆகாத தேதிக ளாகாத சாமங்கள்
ஆகாமுகூர்த் தங்கள் நாழிகைகள் (54)

ஆகாத நக்ஷத்திரந் திதி ராசிகள்
ஆகாக் கிரகங்க ளென்று சொல்லி
வாகான காலத்தின் போக்கில் தடைபண்ணி
மக்கள் சந் தேகப்ப டலாக்கி 55)

யாதுசெய் யவேண்டு மேனுந்தம் மைக்கேட்
டதற்குத் தாருகொடுக்க வென்றே
சோதிடநூலென் றெழுதி வைத்தார் பார்ப்பார்
துரோகம் இதுவென் றெண்ணாமல் (56)

ஓர்தொழில் செய்யவென் றால்பஞ்சாங் கக்காரன்
ஓரம்சென் றுசமயம் அறிந்து
ஆரியரே நல்ல் நாள்பார்த்துச் சொல்லுமென்
றஞ்சலி செய்துகேட் டாலவனும் (57)

சோதிடக் குப்பையைக் கிண்டிக்கிண் டிப் பார்த்துச்
சூதுடன் கேட்போன் தனைநோக்கி
பேதகமான நிலையிற் கிரகங்கள்
பேணி யிருக்கின்ற தாதலினால் (58)

இன்னம்ஐந் தாண்டுக்கு நல்லயோகம் இலை
என்றாலும் ராமேசு ரம்சென்று
ஒன்பதாங் கல்லில் நவக்ரக பூசையை
யோங்கிச்செய் தங்குள்ள வேதியர்க்கு (59)

அன்னதானம்சொன்ன தானம்வஸ்த் ரதானம்
அதிகம் செய்தேயுன் ஊரில்வந்து
மூன்று று வேதியர்க் கன்னமும் சொன்னமும்
முக்கியமாகத் தானம் புரிந்து (60)

அன்னவர் காலிலுன் பெண்டொடு பிள்ளைகள்
அத்தனை பேர்களு மேவிழுந்து
பின்ன ருன்வேலை தொடங்கினா லெல்லாப்
பிழைகளும் நீங்கிடுமென்று சொல்ல (61]

வேதியர் வாக்கினை வேதமென நம்பிப்
பேதைமகன் பெண்டாட்டி கழுத்தில்
காதில் முகத்தினில் கையினில் தோளில்
கழுத்தினி லுள்ள நகைகளெல்லாம் (62)

பறிமுதல் செய்துமே பாமரன் தானும்தன்
பத்தினி தன்னையேழை யாக்கி
வெறியனைப் போலவே பார்ப்பான் சொன்ன
விதங்களெல் லாம்விரைந் தேபுரிந்து (63)

வெறுங்குண் டியம்மணம் போட்டுக்கொள் சம்மணம்
என்னும் பழஞ்சொற் கிலக்கியமாய்
வருமைக்கடலிற் குடும்பத்துடன் மூழ்கி
மாண்டு மடிவதுவே முடிவே [64

இப்படிப் பஞ்சாங்கக் காரன்சொற் கேட்டுமே
யெத்தனை கோடிபேர் கெட்டவர்கள்
அப்பா! சோதிடத் தைப்போல மக்களை
அமுக்கிக் கொல்வது வேறிலையே [65]

இந்த விதமான சோதிடத்தை நம்பி
யேமாந்து கெட்டவ ரெத்தனைபேர்
அந்தோ பாரத புத்திர ரிவ்வழி
யாயச்செயலுக் காளாக லாமோ [66)

நல்லநாள் பொல்லாநாள் என்றுபார்ப்பாரேய்த்து
நாட்டிற் பிழைக்க எழுதியதே
நல்லநாள் பொல்லா நாளுக் கடையாளம்
நவில முடியுமோ ஞானியரே [67]

நாளும் திங்களும் நன்மைசெய் தாலினி
நாம்தொழில் செய்திடக் காரணமேன்
பாழும் புராணங்கள் சோதிடக் குப்பைகள்
பாழுங்குழிதள்ளி மண்போடல் நன்றே [68]

வியாழக் கிழமையில் கோடி யுடுத்தால்
விளையும் பொன்னென்றால் வறியவர்கள்
வியாழத்திற் கோடி யுடுத்துப் பொன்பெற்றுமே
மேன்மை யுறலாமே மெல்லியரே [69]

வெள்ளியில் கோடி கொண்டாற் பெண்ணின் சேர்க்
விளையு மென்றால் மணமில்லா தார் [கை
வெள்ளியிற்கோடி கொண்டே நல்ல பெண்ணை
விவாகம் செயலாமே விற்பனரே [70]

ஞாயிறுசெவ் வாய்பொன் நாள்விருந்து பகை
நண்ணுந் திங்கள் திரும்பாப் பயணம்
எயும் புதன்சனி கோடியுடாரெனின்
எந்நாள் நல்லநா ளேந்திழையே [71]

சித்திரை மைந்தன் பிறக்கொணா தென்றாலச்
சித்திரையிற் புவிமேற பிறந்தோர்
எத்தனை பேர்களுண் டத்தனை மக்களும்
இன்னலுற் றார்களோ பெண்மயிலே (72)

ஆகாத நாளில் சமைந்தவள் விதவை
ஆகி விடுவது மெய்யானால்
வாகான நாள்சமைந் தார்க்குள் விதவைகள்
மண்மிசை யில்லையோ மைவிழியே (73)

பார்ப்பன ரல்லவோ சோதிடம் சொல்வதும்
பஞ்சாங் கங்கள் கணிப்பதுவும்
பார்ப்பாருக்குள் இளம் விதவைப் பெண்கள்
பல்லாயிர மன்றோ பாவையரே (74)

உண்மை யன்புகொண்ட கன்னிகையை மணம்
உற்றிடப் பார்ப்பானிடம் கேட்டால்
அன்னவன் பொருத்த மில்லையென்று சொன்னால்
அந்தோ கலியாண மாகாதே (75)

சற்றும் மனப்பொருத் தம்மிலா மங்கை
தனைமணம் செய்யலா மென்றுபார்ப்பான்
சொற்றிடி லக்கண மேமணஞ் செய்தநி
தொல்லைக்குள் ளாகுவார் தோகையரே (76)

பார்ப்பான் வரவு மிகுதிக்குத் தக்க
படிசோ திடநூல் திருப்புமல்லால்
பார்ப்பான் சோதிடத் துள்ளபடி யொன்றும்
பகர்வ தில்லை பசுங்கிளியே (77)

சோதிடம்பொய் பார்ப்பான் சொல்வதும்பொய் யிந்தச்
சுத்தப்பொய் யைநம்பும் மானிடர்கள்
மேதினி மீதி லிலவுகாத் தகிளி
யாகத் தடையுண்டோ ஆரமுதே (78)

கால்தலை யோடிடை யற்றநா ளாமதில்
காரியங்கள் செயக் கூடாதாம்
காலும் தலையும் இடையும் அறுந்தநாள்
கண்ணிற்குத் தோன்றுமோ காரிகையே (79)

சித்த யோகம் அமுத யோகத்தொடு
செத்தயோ கம்பார்க்க வேண்டுமென்பார்
இத்தனை யோகம் பார்த்தோ விண்விமானத்தில்
ஏகுகின்றார் கள்மேல் நாட்டார்கள் (80)

அட்டமி தன்னிலே தொட்டால் துலங்காதாம்
ஆன நவமியு மாகாதாம்
ஓட்டுப்பன் னான்கும் பவுரணைப் பக்கமும்
ஒன்றுமே செய்வதற் குதவாதாம (81)

ராகுவே ளையம கண்டவே ளைசத்வ
ராசத தாமத வேளைகளாம்
யோகினி நிலையாம் சூலமாம் பார்ப்பானை
யோசனை கேட்டுச் செலவேண்டுமாம் (82)

இத்தனை சங்கடந் தப்பிச் சென்றாலோ
எதிரில் சகுனங்கள் வந்திடுமாம்
கத்தும் கழுதையாம் பல்லியின் கூச்சலாம்
காகம் கருடன்புள் பாய்ச்சலதாம் (83)

எந்தச் சனியனுக் குத்தப்பிக் காரியம்
இந்நாட்டிற் செய்வது பெண்ணணங்கே
இந்தச் சோதிடத் தின்படி பார்த்தக்கால்
எச்செய லுஞ்செய வொண்ணாதே (84)

பார்ப்பா னிடஞ்சென்று காத்திருந்து நன்னாள்
பார்த்துப்பார்த் துக்கண்கள் பூத்துமேபோய்
பார்ப்பார்க் குக்கூலி கொடுத்துக்கொடுத்துமே
பாப்பராய்ப் போனவ ரெத்தனைபேர் (85)

வணிகமுதல் தொழில் செய்யநாள் பார்த்தங்கு
வாகான நாள்கிடை யாதெனவே
முணுமுணுத் துக்கொண்டு சும்மா விருந்துமூ
தேவிக் கிரையானோ ரெத்தனைபேர் (86)

சூலம் சகுனங்கள் ராகு யமகண்ட
தோஷங்களென்று சொல்லிச் சொல்லியே
ஏதுந் தொழில்செ யாதேசோம்ப ராயோ
டெடுத்தவ ரெத்தனை பேர்மயிலே (87)

கரிநாள் கருப்போதன் னாள்வெளுப்போ சூலம்
காலடி தூக்காமல் செய்திடுமோ
ஒருநாள் போலவே யெல்லா நாள்களும்
உள்ளதென் றறிந்து கொள்ளணங்கே (88)

சோதிட மேசம்மைச் சோம்பேறிக ளாக்கித்
தூங்கிடச் செய்தது தோகையரே
சோதிட மேசம் தொழில்கள் நடக்காமல்
தொலைத்து விட்டது தோகையரே [89]

ஆரூடமே நம்மைச் சீர்கெடச் செய்தே
அடக்கி விட்டதென் றாய்ந்தறியே
கோரமாம் ரேகையின் சாத்திரமே நம்மைக்
கொள்ளையிட் டுக்குழி தள்ளியதே (90)

ஆரூடம் சோதிடம் பல்லி அணிலெலி
ஆந்தைச் சத்தங்களுக் கஞ்சாதே
நேரும் தொழில்களை யையமில் லாமலே
நித்தம் புரிகுவோம் ரத்தினமே (91)

சோதிடந் தன்னைப் புராணத்தை நம்பினால்
சோறு கிடைக்குமோ தோகையரே
போதுவீ ணாகாம லேபல தொழிலும்
புரிந்தால் வாழலாம் பூங்கொடியே (92)

சோதிடத் தோடு புராணம் புரோகிதம்
சோறுபார்ப் பானுக்கே போடுமல்லாமல்
யாது மவற்றால் பயன்நமக் கில்லையென்
றறிந்து கொள்ளுவா யாரணங்கே (93)

எந்தெந்தக் காலத்துக் கெந்தெந்த காரியம்
யாவர் செயவேண்டு மென்றாலும்
அந்தந்தக் கணத்தி லட்டியில் லாமலே
அவற்றைச் செய்வது வேமுறையே (94)

பூவிரி காவிரி சாருமீ ரோடெனும்
புண்ய புரியி லவதாரன்
பாவியர் கீழ்விழ ஏழையர் மேலெழப்
பார்மிசை வந்த வுபகாரன் (95)

சாதிப் புரட்டு சமயப் புரட்டுகள
சாஸ்த்ரப் புராணப் புரட்டுகளும்
சோதி டத்தின் புரட்டோடு புரோகிதத்
தொல்லை சடங்குப் புரட்டுகளும் (96)

கோயில் புரட்டு குருக்கள் புரட்டு
கொடிய தீண்டாமைப் புரட்டுகளும்
ஞாயிற்றின் முன்னிருள்போ லகல வந்த
நல்ல கடவுளவ தாரன் (97)

மூடப் பழக்க வழக்கக் களைகள்
முழுதுங் களைந்து பகுத்தறிவாம்
நீடும் பயிர்களை யன்புநீர் பாய்ச்சி
நெடிதுகாத் தெம்மையிங் காண்டபிரான் (98)

பன்றிநாய் சென்றிடும் வீதிதனில் மக்கள்
பாதம் படலாகா தென்றிருந்த
நன்றியில் செய்கையை வென்றவைக் கம்வீர
ராமனெனு முயர் ஞானகுரு (99)

பாதம் பணிந் துய்ந்த வேங்கடசாமி
பகர்ந்த கும்மித்தமிழ்ப் பாடலிதை
யோதி யுணர்ந்துண்மை காண்கென மக்களே
யுங்களை வேண்டிக் கொள்கின்றேனே. (100)

விஷய அட்டவணை.

நெ.		பக்கம்.
1.	சோதிடம்	1.
2.	ஷை. 2-ம் அத்தியாயம்	11
3.	ஜோசியமும், சகுனமும்	23.
4.	கௌமார சோதிடத்தின் புரட்டு	33.
5.	சோதிடப் புரட்டுக் கும்மி	39.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள்	0 8 0
2.	லெனினும், மதமும்	0 4 0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0 3 0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0 4 0
5.	கைவல்யம் அல்லது கலைக்கியானம் (இது சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது)	0 8 0
6.	இராமாயண ஆராய்ச்சி ,, பாலகாண்டம்	0 4 0
7.	,, அயோத்தியாகாண்டம்	0 8 0
8.	,, கிட்கிந்தாகாண்டம்	0 4 0
9.	ஞானசூரியன்	0 5 0
10.	தர்மபரீட்சை அல்லது புராண ஆபாசம்	0 3 0
11.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0 3 0
12.	பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	0 4 0

13.	ஈ. வெ. ரா. சீர்திருத்தமகாநாட்டு உபன்யாசம்	0 2 0
14.	அகத்தியர் ஆராய்ச்சி	0 2 0
15.	இராமலிங்கசுவாமிகள் பாடல் திரட்டு	0 2 0
16.	சுயமரியாதைப்பாடல்	0 2 0
17.	கதர் மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)	0 2 0
18.	சுயமரியாதைத் தாலாட்டு	0 2 0
19.	பர்னார்ட்ஷா உபன்யாசம்	0 1 0
20.	சோஷியலிசம்	0 2 0
21.	போல்ஷ்விக் முறை	0 1 0
22.	ஈ. வெ. ரா. இலங்கை உபன்யாசம்	0 0 9
23.	கத்தோலிக்கர் வீண் கூச்சல்	0 0 6
24.	சமதர்ம உபன்யாசம்	0 0 6
25.	சோதிட ஆராய்ச்சி	0 2 0
26.	மனு நீதி விளக்கம்	0 2 0
27.	மறுப்புக்கு மறுப்பு	0 3 0
28.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0 4 0
29	கர்ப்பத்தடை (விரைவில் வெளிவரும்)	

விலாசம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

1. பெண் ஏன் அடிமையானாள்? (ஈ.வெ.ரா.)	0	5	0
2. முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை	0	5	0
3. கடவுள்.	0	5	0
4. மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?	0	3	0
5. பிரகிருதிவாதம் (ஈ. வெ. ரா.)	0	3	0
6. மதமும், விஞ்ஞான சாஸ்திரமும்	0	3	0
7. பிரபஞ்ச உற்பத்தி	0	3	0
8. நான் ஏன் கிருஸ்தவனல்ல?	0	3	0
9. நான் சம்சயவாதி ஆனதேன்?	0	3	0
10. மெய்ஞ்ஞான முறையும், மூடநம்பிக்கையும்	0	6	0
11. ,, 2-ம் பாகம்	0	5	0
12. ஞானசூரியன்	0	5	0
13. மரணத்திற்குப்பின் வாழ்க்கை உண்டா?	0	4	0
14. மதப்புரட்சி	0	4	0
15. வால்டையரின் சரிதம்	0	4	0
16. பகுத்தறிவு அல்லது மரண சாஸனம்	0	4	0
17. பெண்ணுரிமையும் மதமும்	0	3	0
18. தேவதாசி	0	8	0
19. இந்தியமாதா	0	4	0
20. இங்கர்சாலின் ஜீவிய சரித்திரம்	0	2	0
21. மதம் என்றால் என்ன?	0	2	0
22. தமிழ் வரிவடிவ ஆராய்ச்சி	0	3	0

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

உங்கள் வீட்டிற்கு அறிவு விளக்கு ஏற்ற

வேண்டுமா! அப்படியானால்

(50 புத்தகங்கள்)

சுயமரியாதை

சம்பந்தமாகவும்,

பகுத்தறிவு

சம்பந்தமாகவும் இதுவரை சுமார்

50-புத்தகங்கள்.

வெளியாக்கப்பட்டிருக்கின்றன.

அவைகளின் விலை மிக மிக சரசமானது.

0-2-0 0-3-0 0-4-0 0-5-0 0-6-0

அதற்குமேல் இல்லை.

இவற்றை ஒரு செட்டு மொத்தமாகத் தருவித்து

உங்கள் வீட்டில் வைத்தால்

உங்கள் வீட்டிற்கும் அறிவு வெளிச்சமும்

சுயமரியாதையும் தாண்டவமாடும்.